தரம்

# 11

# தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)




இலத்திரனியற் பரவற் துறை

**தேசிய கல்வி நிறுவகம்**

மஹரகம, ஸ்ரீ லங்கா

**Web**| www.nie.lk **Email**| info@nie.lk

# தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

**மின்பரப்புகைத் துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**இலங்கை**
**இணையத்தளம் : www.nie.lk**
**மின்னஞ்சல் : info@nie.lk**

**தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும்**
தரம் - 11
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2016

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

மின் பரப்புகைத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

*அச்சுப்பதிப்பு :*
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை

நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# பிரதிப்பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

மனிதன் ஆதிகாலம் முதலே முறைமையான கல்விச் செயன்முறை மீது கவனஞ் செலுத்தி வந்துள்ளான். கல்வியின் இலக்குகள், கற்றல் முறைகள் தொடர்பாக அன்று முதல் இன்று வரையில் பல்வேறு அணுகுமுறைகளின் வழியே கண்டறிந்துள்ளவையும் எண்ணிலடங்காதவை எவ்வாறாயினும் கல்வியின் பொது எதிர்பார்ப்பு, ஒவ்வொருவரையும் பூரண ஆளுமை கொண்டவராக உருவாக்குவதாகும். அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் சமூகத்திறன்கள் நிரம்பப் பெற்ற, தமது உள்ளார்ந்த ஆற்றல்களை உச்ச அளவுக்கு விருத்தி செய்து கொண்ட தனியாள்களை உருவாக்குவதற்குப் பொருத்தமான கல்வியை வழங்குவதற்காக முன்னோடியாக எமது நிறுவனம் பங்களிப்புச் செய்கின்றது.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடும் ஆசிரிய ஆசிரியைகள், கல்வியின் குறிக்கோள்கள், கற்றல் செயன்முறை, மதிப்பீடு ஆகிய மூன்று அம்சங்களிலும் சம அளவு கவனஞ் செலுத்துவது அவசியமாகும். அதற்குத் தேவையான வழிகாட்டல் இந்த ஆசிரியர் வழிகாட்டியினால் வழங்கப்படுகின்றது. இவ்வழிகாட்டியை முனமாதிரியாகக் கொண்டு, உங்களுக்குத் தனித்துவமான மாணவர் மையக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையொன்றினை நீங்கள் திட்டமிட்டுக் கொள்ளலாம்.

மாணவரின் விருத்தி , கல்வி முறைமையில் புத்தறிவைப் பிறப்பித்தல் போன்ற பல்வேறு எதிர்பார்ப்புக்களை முதன்மையாகக்கொண்டு ஆராய்ச்சிப் பணியிலும் ஆசிரியர் ஈடுபடுவது இன்றிமையாததாகும். வெற்றிகரமாக ஒவ்வோர் ஆசிரியரும் ஒவ்வொரு ஆராய்ச்சியாளர் ஆவார். நீங்கள் எற்கனவே நடத்திவரும் ஆராய்ச்சிப் பணிகளை மேலும் முறையானவகையில் செய்யத் திடசங்கற்பம் பூணுவது காலத்தின் தேவையாகும். அதற்குத் தேவையான வழிகாட்டல்களைப் பெறுவதற்காக எமது பங்களிப்பை எப்பொழுதும் நாடலாம் என்பதை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

ஆசிரியர் ஞானக்கண்ணுடையோராவர் என்றால் அது மிகையாகாது மாணவர்களது கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் மட்டுமன்றி எதிர்காலத்தையும் ஊடுருவி நோக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு. ஆசிரியர் ஒரு போதும் வழிகாட்டியாக முன்னால் செல்பவராவார். மற்றுமொரு போது மாணவர்கள் முன்னாற் செல்ல தாம் பின்னால் செல்பவராவார். தெளிவான விளக்கத்துடனும் நன்மனப்பாங்குகளுடனும் செயற்படும் பாண்டித்தியமிக்க ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களது பல்வகைமையைக் கவனத்திற் கொண்டு அம்மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குத் தேவையான பொறுப்புக்களை ஏற்று அவருக்கு வகை கூறும் வகையில் செயற்படும் நல்லாசிரியர்களாக விருத்தியடைவதற்கு மேன்மேலும் ஆற்றல் கிடைக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.

**பீ. சனத் பூஜித்த**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பீடம்

## கலைத்திட்டக்குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

**பாட இணைப்பாக்கம்**

செல்வி. ஏ. நீலமணி (M.Phil), சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

**பாடநிபுணத்துவ ஆலோசனை**

தகைசார் பேராசிரியர். சுனந்த மகேந்திர (PhD), வெகுசனத் தொடர்பாடற் கற்கைப்பிரிவு, களனிப் பல்கலைக்கழகம்

தகைசார் பேராசிரியர். ஜே.பீ. திசாநாயக்க (PhD, MA, D.Lit) சிங்களக் கற்கைப்பிரிவு, கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர். ரோஹண லக்ஷ்மன் பியதாஸ (PhD) பிரிவுத்தலைவர், வெகுசன ஊடகக் கற்கைப்பிரிவு, களனிப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் சந்திரசிறி ராஜபக்ச (PhD), வெகுசன ஊடகக் கற்கைகள் பிரிவு, களனிப் பல்கலைக்கழகம்

கலாநிதி எஸ். ரகுராம் (PhD), சிரேஷ்ட விரிவுரையாளர், ஊடகக் கற்கைகள் பிரிவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திரு. சேனானி ஹரிச்சந்திர (MCMS), சிரேஷ்ட விரிவுரையாளர், சிங்களம் மற்றும் வெகுசனத்தொடர்பாடல் கற்கைப்பிரிவு, ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

திரு. சுனில் சரத் பெரேரா, முன்னையநாள் தலைவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்

**எழுத்தாளர் குழு**

செல்வி. ஏ. நீலமணி (MPhil), சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

திரு. டபிள்யு.ஜீ.கே.எஸ். பண்டார (MA), ஆசிரியர் சேவை - 2 II, மம./க/ மக்குளுகஸ்வெவை மகாவித்தியாலயம், தேவஹாவை

திரு. கே.எச்.சீ. மனோஜ் ஹேவகே (PGDE), ஆசிரியர் சேவை - 2 II

**தமிழ் மொழிப் பெயர்ப்பாளர்கள்**

சிவப்பிரியா ஸ்ரீராம், விரிவுரையாளர், மொழிகள் மற்றும் தொடர்பாடல் துறை, திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம்
திரு. எம்.எச்.எம். யாகூத், முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி.
வீ. திருச்சபேசன், சிரேஸ்ட விரிவுரையாளர், கோப்பாய், ஆசிரிய கல்லூரி, கோப்பாய்
ஆர். தமிழ்ச்செல்வம் பிள்ளை, பாட இணைப்பாளர், வலயக்கல்வி காரியாலயம், மாத்தளை
வீ. சிங்கராஜ், ஆசிரியர் சேவை 2.1, நு/ வட்டகொட தமிழ் ம.வி. வட்டகொட
ஏ.எச். மோகன், ஆசிரியர் சேவை 2.1, நு/ சாந்த கிளாயர் தமிழ் ம.வி. தலவாக்கொல

**கணினி வடிவமைப்பு** எம். என். எப். றிஹானா - தேசிய கல்வி நிறுவகம்

**பல்வேறு உதவிகள்** எஸ். அழககோன் - தேசிய கல்வி நிறுவகம்
ஆரியதிலக பெர்ணாந்து - தேசிய கல்வி நிறுவகம்

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய ஆலோசனைகள்

தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும் எனும் பாடம் 2006 தொடக்கம் பாடசாலை முறைமையில் அமுலில் உள்ளது. இது க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் ஆகிய இரண்டிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. க.பொ.த. சாதாரண தர பாடத்துறையின்கீழ் 10 - 11 ஆந் தரங்களுக்குரிய தொகுதிப்பாடங்களுள் (Basket Subject) ஒன்றாக இது நடைமுறையில் உள்ளது. இப் பாடத்தின் 10ஆம் 11 ஆந் தரக் கலைத்திட்டம் 12 தேர்ச்சிகளின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்காக ஒவ்வொரு தரத்திலும் வாரத்துக்கு மூன்று பாடவேளைகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடம் 10 - 11 ஆந் தரக் கலைத்திட்டத்தில் ஒன்றாகும். 10 ஆம் தரத்துக்காக 01 தொடக்கம் 06 வரையிலான 06 தேர்ச்சிகளும் 11 ஆந் தரத்துக்காக 07 - 12 வரையிலான 06 தேர்ச்சிகளுமாக மொத்தம் 12 தேர்ச்சிகளிற்கு பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தேர்ச்சிகளின் வழியே கற்றல் கற்பித்தற் செயன்முறையை நடைமுறைப்படுத்தும்போது முதலாவது தேர்ச்சி தொடக்கம் ஒழுங்குமுறைப்படி கற்றல் கற்பித்தல் செயன்முறையை முன்வைப்பது எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

ஆசிரியர்கள் தமது நாளாந்தக் கற்றல் கற்பித்தல் கருமங்களைத் திட்டமிடும்போது இங்கு தரப்பட்டுள்ள வழிகாட்டல்கள் நாற்பது நிமிடப் பாடவேளைகளை இலக்காகக் கொண்டு திட்டமிடப்பட்டவையல்ல என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். பாடசாலையின் பல்வகைமை, மாணவரது பல்வகைமை போன்ற பல்வேறு காரணிகளைக் கவனத்திற்கொண்டு இங்கு தரப்பட்டுள்ள அடிப்படைத் திட்டத்தை இயன்ற அளவுக்கு அனுசரித்துப் பாடவேளைக்குப் பொருத்தமானவாறு ஆசிரியர் பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளல் அவசியமாகும்.

ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள சில கற்றல் செயற்பாடகளை குறித்த பாடவேளைக்கு மாத்திரம் வரையறைப்படுத்துவதை விடுத்து, செயலமர்வுகள், விசேட தினங்கள், காலைக்கூட்டம் போன்றவற்றையும் பயன்படுதிப் பல்வேறு பாட இணைச் செயற்பாடுகளைத் தழுவி (தேவைக்கேற்ப முறைமையாகத்திட்டமிட்டு அனுமதியும் பெற்று) நடைமுறைப் படுத்துதல் வேண்டும்.

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடமானது பெரிதும் செயன்முறை சார்ந்ததும் நாளுக்கு நாள் புத்தம்சங்கள் வந்து சேர்வதுமான ஒரு பாடமாதலால், மாணவரைக் கற்றல் கற்பதன் பால் வழிப்படுத்துவதும், அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்ரீதியில் கற்று வழிப்படுத்துவதும், கூடவே மாணவர்க்குத் தமது உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து கொள்வதற்குச் சந்தர்ப்பமளிப்பதும் அவசியமாகும். இது தொடர்பாகக் கவனஞ் செலுத்தி, ஆசிரியர் வழிகாட்டியையும் பயன்படுத்தி மேன்மேலும் ஆக்கியல்பூர்வமான வகையில் மாணவர் மையக் கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தலை முன்வைக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**செயற்றிட்டக்குழு**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **பணிப்பாளர் நாயகத்தின் செய்தி** | **iii - iv** |
| **பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி** | **v** |
| **கலைத்திட்டக்குழு** | **vi** |
| **ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய ஆலோசனைகள்** | **vii** |
| **பாடத்திட்டம்** | **ix - xli** |
| **கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளும்** | |
| தேர்ச்சி 7.0 (தகவல் அறிக்கையிடல்) | 1 - 9 |
| தேர்ச்சி 8.0 (அச்சு ஊடகங்கள்) | 10-19 |
| தேர்ச்சி 9.0 (வானொலி ஊடகம்) | 20-26 |
| தேர்ச்சி 10.0 (தொலைக்காட்சி ஊடகம்) | 27-34 |
| தேர்ச்சி 11.0 (படைப்பாக்கரீதியான தொடர்பாடல், ஒழுக்கங்கள், சட்டம்) | 35-46 |
| தேர்ச்சி 12.0 (விமர்சனரீதியான பெறுநர்) | 47-56 |

# தொடர்பாடலும் ஊடகவியற் கற்கையும்

## பாடத்திட்டம்

## தரம் 11

(2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

ஊடகக் கல்விச் செயற்றிட்டம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம்: www.nie.lk மின்னஞ்சல் : info@nie.lk

# அறிமுகம்

தொடர்பாடலும் மற்றும் ஊடகக் கற்கையும் எனும் பாடம் துரிதமாக மாற்றமடைந்து செல்லும் தன்மையையும் உலகத்துடன் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணும் தன்மையையும் பிரயோகத்தன்மையையும் இயக்கத்தன்மையையும் கொண்ட ஒரு விடயப்பரப்பாகும். இப்பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தில் தொடர்பாடல் மற்றும் பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் பற்றிய அறிவூட்டம் சார்ந்த தேர்ச்சிகளையும் மாணவரின் சொந்த வாழ்க்கை மற்றும் சமூக வாழ்க்கையை இசைவுபடுத்தத்தக்க செயன்முறைசார்ந்த தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சிகளையும் விருத்தி செய்வதற்குப் பொருத்தமான பாடப்பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் இப்பாடத்திட்டத்தின் ஆறு தேர்ச்சிகளின் கீழ் அடங்கும் தேர்ச்சி மட்டங்களின் கீழ் விடய உள்ளடக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அத்தேர்ச்சிகள் மற்றும் தேர்ச்சி மட்டங்களின்கீழ் விடய உள்ளடக்கத்துக்குரிய வெவ்வேறு தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது அடைய எதிர்பார்க்கப்படும் கற்றற்பேறுகளும் இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன. இத்தேர்ச்சிகள் விருத்தியடையும்போது விடய உள்ளடக்கத்துக்கு அமைவாக மேன்மேலும் கற்றற்பேறுகளை அடையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம். |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல் ஒழுங்கு முறையாக அளத்தல். |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகிய வற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட் பங்களைப் (ICT) பயன்படுத்தல். |



### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்நுணிவு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

| | |
|---|---|
| சமூகச் சூழல்: | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும். |
| உயிரியல் சூழல்: | வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு |

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங் களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**7. ‘‘கற்றலுக்குக் கற்றல்’’ தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## பாடக் குறிக்கோள்கள்

1. தொடர்பாடலின் கொள்கை, கோட்பாட்டு (Theory/ Principles) அடிப்படைகளை விளங்கிக் கொள்ளல்
2. சமகால ஊடகச் சூழலை விளங்கிக் கொள்ளலும் பகுத்தாய்தலும்
3. தொடர்பாடல் மற்றும் ஊடகச் சூழலின் தேவைகளுக்காக தமது ஆக்கியல் திறன்களைப் பயன்படுத்துவதற்கான முறையியல்களைக் கையாண்டு பார்த்தல்
4. சனநாயகப் பிரசை என்ற வகையிலும் பகுத்தறிவுடன் செயற்படும் பெறுநர் என்ற வகையிலும் செயற்படுவதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்ளல்
5. எதிர்காலத் தொழில் வாய்ப்புக்களுக்காக தமது தொடர்பாடல் தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்ளல் தொடர்பான கவனத்துடன் செயற்படுதல்.

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 மாணவன்/மாணவி தகவல் தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்று தகவல் திரட்டல் மற்றும் தகவலை முன்வைக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார். | 7.1 தகவலை அறிந்துக்கொள்வதன் அவசியத்தை இனங்கண்டு தகவல் பணியின் வளர்ச்சியை விளக்குவார். | **7.1 தகவல்கள்**<br><br>7.1 தகவல் - வரையறுத்தல்<br>(1) தகவல் என்பது யாது என வரையறுத்தல்<br>(2) பண்டுதொட்டு இன்று வரையில் சமூக வளர்ச்சிக் கட்டங்களில் தகவல்களின் பங்கு<br>(3) தகவல்களை அறிந்து கொள்வதற்கான தனியாளின் தேவை<br>(4) தகவல்களை அறிந்து கொள்வதற்கான சமூகத்தின் தேவை. | 1. தகவல் என்றால் என்ன எனச் சரியாக விளக்குவார்.<br>2. தகவலின் வகைப்பாட்டை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>3. தகவல் அறிந்து கொள்வதன் அவசியத்தை உரிய காரணங்களுடன் விபரிப்பார்.<br>4. மனிதனுக்கும், தகவலுக்கும் இடையிலான இடைத்தொடர்பைப் பரிசீலனை செய்வார்.<br>5. ஆதிகாலம் முதல் தற்காலம் வரை சமூக மாற்றங்களின்போது மனிதன் தகவலைப் பயன்படுத்தும் விதம் பற்றி ஆய்வு செய்வார்.<br>6. தகவல் அறிந்து கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு வழிமுறைகளை இனங்காண்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 7.2 நிகழ்வுகள், தகவல் மற்றும் செய்தி தொடர்பான அடிப்படை விளக்கத்தினை வெளிக்காட்டுவார். | 7.2 நிகழ்வுகள், தகவல்கள், செய்திகள்<br>(1) நிகழ்வுகள், தகவல்கள், செய்திகள் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு<br><br>(2) செய்திகளை இனங்காணலும், செய்தியினது பெறுமானத்தின் மீது பங்களிக்கும் காரணிகளும். | 1. நிகழ்வுகள், தகவல் மற்றும் செய்திக்கிடையிலான வேறுபாட்டை விளக்குவார்.<br>2. செய்தியை அறிந்து கொள்வதன் அவசியத்தை விளக்குவார்.<br>3. செய்தியின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செய்தியினை வகைப்படுத்துவார்.<br>4. செய்தியின் நன்மதிப்பின் மீது செல்வாக்கு செலுத்தும் காரணிகளை விளக்குவார்.<br>5. செய்தியொன்றினை முன்வைக்கும் நுட்ப முறைகளை வெளிக்காட்டுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.3 தகவல் திரட்டும் நுட்பமுறைகள் பற்றிய விளக்கத்துடன் தகவல் திரட்டும் ஆற்றலை வெளிக்காட்டுவார் | 7.3 தகவல் சேகரித்தல்<br>1. தகவல் மூலாதாரங்கள்<br>2. தகவல் சேகரிப்பவரிடத்தே காணப்பட வேண்டிய பண்புகள்.<br>3. தகவல் சேகரிப்பு நுட்பமுறைகள்<br>4. தகவல் சேகரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள்<br>5. தகவல் சேகரித்தல் | 1. தகவல் திரட்டலின்போது பயன்படுத்தப்படும்பல்வேறு தகவல் மூலங்களை இனங்காண்பார்.<br>2. தகவல் திரட்டும் நபர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகளை மதிப்பிடுவார்.<br>3. தகவல் திரட்டும் பல்வேறு நுட்பமுறைகளை விளக்குவார்.<br>4. தகவல் திரட்டும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்கநெறிகளைக் கவனத்திற்கொள்வார்.<br>5. தகவல் தேடுதலின் போது பயன்படுத்தப்படும் உபாயங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.4 தகவல் அறிக்கையிடல், தகவல் முன்வைக்கும் நுட்பமுறைகள் மற்றும் விதிமுறைகள் பற்றிய போதிய விளக்கம் மாணவரிடத்தே காணப்பட வேண்டும். அதனூடாகத் தகவல் முன்வைக்கும் தேர்ச்சியினை மாணவன்/ மாணவி வெளிப்படுத்துவார். | 7.4 தகவல்களை அறிக்கைப்படுத்தல்<br>(1) தகவல்களை வெற்றிகரமாக அறிக்கைப்படுத்தலின் அல்லது தகவல் அறிக்கையின் (Presentation) வெவ்வேறு வடிவங்கள்<br>(2) தகவல்களை வெற்றிகரமாக அறிக்கை செய்யும் நுட்பமுறைகள் தகவல்களை வெற்றிகரமாக முன்வைப்பதற்காக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் (எழுத்து மொழி மற்றும் பேச்சுமொழியைப் பயன்படுத்துவதற்குரிய உத்திகள்)<br>(3) தகவல்களை அறிக்கைப்படுத்தல் செய்முறைச் செயற்பாடுகள் | 1. தகவல் அறிக்கையிடலின் அவசியத்தை இனங்காட்டுவார்.<br>2. தகவல் முன்வைக்கும் பல்வேறு வடிவங்களை விளக்குவார்.<br>3. தகவல் முன்வைக்கும் நுட்பமுறைகளை விளக்குவார்.<br>4. தகவல் அறிக்கையிடலின் அடிப்படை விழுமியங்களைப் பயன்படுத்தி, தகவல் ஒன்றை வெற்றிகரமாக அறிக்கையிடுவார். | 03<br><br>(12) |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **8.0.** அச்சு ஊடக வெளியீடுகள் தொடர்பில் செய்திப் பத்திரிகைகள், மற்றும் அச்சு ஊடகப் பிரசுரங்கள், அவற்றின் உள்ளடக்கத்திற்கான விளக்கத்துடன் செய்திப் பத்திரிகை ஆக்கம் தொடர்பான நுட்பங்களின் திறனை வெளிப்படுத்துவார். | 8.1. எழுத்துக் கலை வளர்ச்சி மற்றும் அச்சு ஊடக தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பில் அடிப்படைத் தகவல்களை ஆய்வு செய்வார். | **8. அச்சு ஊடகம்**<br>8.1 அச்சு ஊடகம் - வரையறுத்தல்<br>1. எழுத்தாக்கத்தின் வளர்ச்சி - பண்டைய காலம்<br>2. எழுத்தாக்கத்தின் வளர்ச்சி - நவீன காலம்<br>3. அச்சுத் தொழில்நுட்ப வளர்ச்சி | 1. தொடர்பாடல் ஊடகங்களில் ஒன்றான அச்சு ஊடகப் பாவனையின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுவார்.<br>2. உலக ரீதியாக அச்சு ஊடகத் தோற்றம் மற்றும் வளர்ச்சிப் போக்குகளைக் கண்டறிவார்.<br>3. இலங்கையின் புராதன காலத்தில் எழுத்துப் பயன்பாட்டின் வளர்ச்சியின் போக்கைக் கண்டறிவார்.<br>4. இலங்கையின் பழமையான எழுத்துரு ஆவணங்களில் வளர்ச்சி ஏற்பட்ட முறை தொடர்பில் விபரிப்பார்.<br>5. அன்றும் இன்றும் அச்சுத் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்ற போக்குகள் தொடர்பான தகவல்களை வெளிப் படுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.2 பல்வேறு அச்சு ஊடகங்களுடன் தொடர்பான உள்ளடக்கங்களையும் அவற்றின் பல்வகைமைகளையும் தொடர்புபடுத்தி இனங்காண்பார். | 8.2 அச்சு ஊடக வடிவங்கள்<br>1. நூல்கள்<br>2. செய்தித் தாள்கள் (புதினப் பத்திரிகைகள்)<br>3. சஞ்சிகைகள்<br>4. சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள். | 1. அச்சு ஊடகங்களின் பல்வேறு இயல்புகளை இனங்கண்டு முன்வைப்பார்.<br>2. பல்வேறு அச்சு ஊடகப் பயன்பாட்டின் பயனுறுதிகளை தனித்தனியாக மதிப்பீடு செய்வார்.<br>3. அச்சு ஊடகம் என்ற வகையில் புத்தகங்களின் உள்ளடக்கங்களின் விசேட இயல்புகளை விளக்குவார்.<br>4. அச்சு ஊடகம் என்ற வகையில் செய்திப் பத்திரிகைகளின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.<br>5. அச்சு ஊடகம் என்ற வகையில் சஞ்சிகைகளின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.<br>6. அச்சு ஊடகம் என்ற வகையில் சுவரொட்டிகள், | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.<br>7. ஆக்கபூர்வமான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்துக் காட்சிப்படுத்துவார். | |
| | 8.3.இலங்கையில் செய்தித்தாள்களின் வடிவமைப்பு, உள்ளடக்கம்தொடர்பான விசேட இயல்புகள் பற்றிய விளக்கங்களுடன் செய்தித்தாள் தயாரிப்பில் மாணவன்/ மாணவி ஈடுபடுவார். | 8.3 செய்தித்தாள் ஊடகத்தை இனங்காணல்<br>1. செய்தித்தாள்<br>- வகைப்படுத்தல்<br>- அளவின்பால் வகைப்படுத்தல்<br>- காலத்தின்படி வகைப்படுத்தல்.<br>- விடயத்தின்படி வகைப்படுத்தல்.<br>- வாசகரின்படி வகைப்படுத்தல்.<br>2. செய்தித் தாளின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளல். | 1. ஊடகம் என்ற வகையில் செய்தித்தாளின் முக்கியத்துவத்தினை இனங்காட்டுவார்.<br>2. பல்வேறு நியதிகளிற்கு அமைய செய்தித்தாள்களை வகைப்படுத்துவார்.<br>3. செய்தித்தாள்களின் உள்ளடக்கத்தினைப் பகுப்பாய்வு செய்வார்<br>4. செய்தித்தாள் ஊடகத்தின் ஆக்கபூர்வமான வடிவ அமைப்புக்களை இனங்காண்பார். | 07 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | (செய்திகள், ஆசிரியர் தலையங்கம், உரையாடல், கருத்துப்படம் பத்தி எழுதுதல், ஒளிப் படங்கள், விவரணங்கள், விளம்பரங்கள்)<br>- செய்தித்தாள் உள்ளடக்கத்தின் சமகாலச் சிறப்பம்சங்கள்.<br>- பதிப்பாசிரியர் கருத்து, விசேட கட்டுரைகள்<br>3. செய்தித்தாள் ஆக்க மாதிரிகள்<br>- காலத்துக்கேற்ற உள்ளடக்கம்<br>- உள்ளடக்கத்திற்கான ஆக்கபூர்வமான மாதிரிகள்<br>- செய்திகளுக்கும் (Text) படங்களுக்கும் இடையிலான தொடர்பு<br>- மின் (இலத்திரனியல்) செய்தித்தாள்<br>4. செய்தித்தாள் பிரயோகங்கள் - செய்முறைச் செயற்பாடுகள். | 5. இலத்திரனியல் செய்தித்தாள் பயன்பாட்டின் பல்வேறு வடிவங்களையும் இயல்புகளையும் விளக்குவார்.<br>6. செய்தித்தாள் உள்ளடக்கத்தினைக் கவனத்திற்கொண்டு செய்தித்தாள் வடிவமைப்பை பிரயோகத்திறனுடன் மேற்கொள்வார். | (15) |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0. வானொலி ஊடகத்தின் இயல்பு மற்றும் வளர்ச்சி பற்றிய அறிவுடன் வானொலியை விமர்சன ரீதியாக அணுகுவதற்கும் வானொலி நுட்பமுறைகளை அறிவதற்குமான ஆற்றலை வெளிப்படுத்துவார். | 9.1. வானொலி ஊடகத்தின் வளர்ச்சி மற்றும்இயல்பு பற்றிய தகவல்களை ஆய்வு செய்வார். | **9.0 வானொலி ஊடகம்**<br>9.1 வானொலி ஊடகம் - வரையறுத்தல்<br>1. வானொலி தோற்றம் பெற்றமை<br>- வானொலி தோற்றம் பெறல் - உலக வரலாறு<br>- இலங்கையில் வானொலியின் ஆரம்பமும் வளர்ச்சியும்.<br>2. வானொலி ஊடகத்தின் தன்மைகள்.<br>- ஊடகத்தின் இயல்புகள்<br>3. வானொலியின் புதிய போக்குகள் (செயல்நெறிகள்) | 1. வானொலி தோற்றம் பெற்ற வரலாற்றையும் வளர்ச்சிச் செயன்முறை பற்றிய கருத்துக்களையும் கண்டறிவார்.<br>2. இலங்கையில் வானொலி ஆரம்பிக்கப்பட்ட விதத்தை விபரிப்பார்.<br>3. ஆரம்ப காலம் முதல் தற்காலம் வரை வானொலி ஊடகம் இலங்கையில் பெற்றுள்ள செல்வாக்கை/ பிரபல்யத்தை மதிப்பிடுவார்.<br>4. வானொலி ஊடகத்தின் தனித்துவ இயல்புகளை விபரிப்பார்.<br>5. வானொலி ஊடகத்தின் புதியபோக்குகள் பற்றி அறிந்திருப்பார்/ விமர்சிப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.2. வானொலி ஊடகத்தின் உள்ளடக்கம் மற்றும் படைப்பாக்க ரீதியிலான அம்சங்கள், வேறுபாடுகளை இனங்காண்பார். | 9.2 வானொலி நிகழ்ச்சியின் வகைகள்<br>1. செய்தி நிகழ்ச்சிகள்<br>2. சஞ்சிகை நிகழ்ச்சிகள்<br>3. நாடக நிகழ்ச்சிகள்<br>4. இசை நிகழ்ச்சிகள்<br>5. நேரடி (Live) நிகழ்ச்சிகள்<br>6. நேர்காணல் நிகழ்ச்சிகள் | 1. வானொலி ஊடக நிகழ்ச்சிகளின் வகைகளைப் பெயரிடுவார்.<br>2. வானொலி ஊடக நிகழ்ச்சி வடிவங்களின் உள்ளடக்கத்தை விபரிப்பார்.<br>3. வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பிற்கு அவசியமான நுட்பங்களை விளக்குவார்.<br>4. வெவ்வேறு நிகழ்ச்சி வகைகளின் தரத்தை உயர்த்துவதற்கான நுட்பங்ளைப் பிரயோகித்துப் பார்ப்பார்.<br>5. வானொலி நிகழ்ச்சிகளின் வகைகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை மட்டத்தில் நிகழ்ச்சிகள் தயாரிப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.3. வானொலியை விமர்சனரீதியாகச் செவிமடுத்து ஆக்கபூர்வமானதும் தரமானதுமான வானொலிநுட்பங்களை வெளிக்காட்டும் ஆற்றலைப் பெறுவார். | 9.3 வானொலியைப் பயன்படுத்துதல்<br>1. வெவ்வேறு அலைச் சேவைகளின் நிகழ்ச்சிகளை விமர்சன ரீதியில் கேட்டல்.<br>2. வானொலியைப் பயன்மிக்கவாறு பயன்படுத்துதல்.<br>3. வானொலி ஊடகத்தைப் பயன்படுத்துதல் (பாடசாலை ஊடக அலகின் வழியே)<br>- வானொலி ஊடக மின் (இலத்திரனியல்) செயன்முறை பற்றிய வகைகள்<br>- பாடசாலை ஊடக அலகின் செயற்பாடுகள். | 1. வெவ்வேறு வானொலி அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும் பிரபலமான மற்றும் வெற்றிகரமான நிகழ்ச்சிகளை மாணவன்/ மாணவி செவிமடுப்பார்.<br>2. வானொலி அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனரீதியான கருத்துக்களைத் தெரிவிப்பார்.<br>3. வினைத்திறன்மிக்க வானொலி நிகழ்சிகளை இனங்காண்பது பற்றி மற்றவர்களுக்கு அறிவூட்டுவார்.<br>4. வானொலி நிகழ்ச்சிகளின் வெற்றிக்குக் காரணமாகும் படைப்பாக்க ரீதியான பண்புகளை இனங்காட்டுவார்.<br>5. பொழுதுபோக்கிற்காக வானொலி ஊடகத்தை வினைத்திறன் மிக்கவாறு பயன்படுத்துவார். | 05<br><br>12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 10.0. தொலைக்காட்சி ஊடக ஒளிப்பரப்பின் இயல்பை விளங்கிக் கொள்வதுடன், விமர்சன கண்ணோட்டத்துடன் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசிக்கும் திறனை வெளிப்படுத்துவார். | 10.1 தொலைக்காட்சி ஊடகப்பின்னணி தொடர்பான விளக்கத்துடன் தொலைக்காட்சி யை விமர்சன ரீதியாகப் பயன்படுத்தும் திறன்களை வெளிப்படுத்துவார். | **10. தொலைக்காட்சி ஊடகம்**<br>10.1 தொலைக்காட்சி<br>1. தோற்றம் பெற்ற வரலாறு-<br>- தொலைக்காட்சி தோற்றம் பெற்ற வரலாறு - உலகம்<br>- இலங்கையின் தொலைக்காட்சி ஆரம்பமும் வளர்ச்சியும்<br>2. தொலைக்காட்சி ஊடகத்தின் தன்மை ஊடகத்தின் இயல்புகள்<br>3. தொலைக்காட்சியின் புதிய போக்குகள் (செயல்நெறிகள்) | 1. தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்புகளை இனங்காண்பார்.<br>2. தொலைக்காட்சி தோன்றிய வரலாற்று அடிப்படையில் அதனை விளக்குவார்.<br>3. இலங்கையில் தொலைக்காட்சி ஊடகம் ஆரம்பிக்கப்பட்ட முறை தொடர்பாக ஆய்வில் ஈடுபடுவார்.<br>4. இலங்கையின் தொலைக்காட்சி ஊடகம் கொண்டுள்ள பரிணாம வளர்ச்சி தொடர்பாக பெருமிதம் கொள்வார்.<br>5. தொலைக்காட்சி ஊடகத்தின் புதிய வளர்ச்சி அனுபவங்களை உள்வாங்குவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.2. தொலைக்காட்சி ஊடகத்தின் உள்ளடக்கம் மற்றும் சட்டக மாதிரியான பல்வகைமை என்பவற்றை தொடர்புபடுத்தலின் மூலம் இனங்காண்பார். | 10.2 தொலைக்காட்சி ஊடக நிகழ்ச்சி வகைகள்<br>- தொலைக்காட்சி நாடகங்கள்<br>- இசை நிகழ்ச்சிகள்<br>- கலந்துரையாடல்கள், கருத்தாடல்கள்.<br>- சஞ்சிகை நிகழ்ச்சிகள்<br>- செய்திகள்<br>- மெய்மை நிகழ்ச்சிகள் (Reality Shows)<br>- விவரண நிகழ்ச்சிகள்<br>- நேரடி ஒலி - ஒளிப்பரப்புக்கள் | 1. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வகைப்படுத்திக் கூறுவார்.<br>2. தொலைக்காட்சி நிகழச்சிகளின் உள்ளடக்கத்தை விளக்குவார்.<br>3. பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒலி - ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்து கொள்வார்.<br>4. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரம் அடிப்படையில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் உபாயங்களைச் சுட்டிக்காட்டுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.3. பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின்ஆக்கம் அதன் தரம் தொடர்பாக விமர்சன அடிப்படையில் மதிப்பிடும் திறன் பெறுவார். | 10.3 தொலைக்காட்சி ஊடகத்தைப் பயன்படுத்துதல்.<br>1. வெவ்வேறு தேவைக்காக சேவைகள் (Channels) நிகழ்ச்சிகளை விமர்சன ரீதியில் பார்த்தல் கேட்டல்.<br>2. தொலைக்காட்சியை தேவைக்கேற்றவாறு பயனுள்ளவாறு பயன்படுத்துதல். | 1. பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிச்சேவை நிகழச்சிகளின் தரம் தொடர்பாக விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைப்பார்.<br>2. பயனுள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்காக ஏனையோரை ஈடுபடுத்துவார்.<br>3. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரம் தொடர்பாக நிர்ணயம் செய்வதற்குத் தேவையான நியமங்களை இனங்காண்பார்.<br>4. தொலைக்காட்சி நிகழச்சிகளின் வெற்றிக்கு ஏதுவான ஆக்கரீதியான பண்புகளைச் சுட்டிக்காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 10.4 தொலைக்காட்சி ஊடகம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தினை விமர்சன அடிப்படையில் இனங் காண்பார். | 10.4 தொலைக்காட்சி ஊடகம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்<br>1. பொது மக்களிற்கு ஏற்படும் தாக்கம்<br>2. மாணவர்களிற்கு ஏற்படும் தாக்கம் | 1. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏற்படுத்தும் பல்வேறு தாக்கங்களை வகைப்படுத்துவார்.<br>2. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மாணவர்களிற்கு ஏற்படுத்தும் தாக்கங்களை உதாரணங்களுடன் இனங்காட்டுவார்.<br>3. தொலைக்காட்சி ஊடகம் பொது மக்களிற்கு ஏற்படுத்தும் தாக்கங்களை அறிந்து கொள்வார்.<br>4. தொலைக்காட்சி ஊடகம் நல்ல சமூக இயல்புகளை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுவார். | 04<br>12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0. பல்வேறு படைப்பாற்றல் நுட்பங்களை இனங்காண்பதன் மூலம் படைப்பாற்ற-லுக்காகப் பிரயோகிக்கக் கூடிய நுட்பங்கள், மூலாதாரங்கள் போன்ற விளக்கத்துடன் படைப்பாக்கங்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல்களை வெளிப்படுத்துவார். | 11.1. ஆக்கங்களின் மூலம் படைப்பாற்றல் பண்புகளின் அடிப்படை விளக்கங்களை வெளிப்படுத்துவார். | **11.0 ஆக்கியல் பூர்வமான தொடர்பாடல்**<br><br>11.1 ஆக்கியல் பூர்வமாக தொடர்பாடல்<br>1. ஆக்கங்களின் வழியே படைப்பாக்கப் பணியையினங்காணல்.<br>2. ஒரே அனுபவம், வெவ்வேறு வகைகளின் ஆக்கங்களின் வழியே அறிக்கை செய்யப் படுகின்றமை<br>3. ஒரே ஆக்கமாயின் கூட, பிரதேச ரீதியில் வேறுபாடுகள் உண்டு என்பதை அறிதல். | 1. படைப்பாக்க ரீதியான தொடர்பாடல், பொதுத் தொடர்பாடலிலிருந்து வேறுபடும் விதத்தை விளக்குவார்.<br>2. படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுவார்.<br>3. பல்வேறு படைப்பாக்கங்களின் ஊடாக படைப்பாற்றலுக்கான பண்புகளை விளக்குவார்.<br>4. ஒரு அனுபவத்தின் அடிப்படையில் பல்வேறு மாதிரிப் படைப்புகள் உருவாக்கப்படும் முறைகளை உதாரணங்களுடன் முன்வைப்பார்.<br>5. படைப்பாற்றலின் மூலம் தொடர்பாடல் திறன்களை வெளிப்படுத்துவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 11.2. ஆக்கங்களின்போது பிரயோகிக்கப்படக் கூடிய படைப்பாற்றல் விதிகளை இனங்காண்பார். | 11.2 ஆக்கியல் பூர்வமான வெளிப்பாட்டு உத்திகள்<br>1. மொழிசார்ந்த வெளிப்பாட்டு உத்திகள்.<br>2. செவிப்புல வெளிப்பாட்டு உத்திகள்.<br>3. கட்புல வெளிப்பாட்டு உத்திகள்.<br>4. கட்புல செவிப்புல வெளிப்பாட்டு உத்திகள். | 1. ஆக்கங்களின் படைப்பாற்றல் பண்புகளை மேம்படுத்தப் பிரயோகிக்கக்கூடிய பல்வேறு முறையியல்களை இனங்காண்பார்.<br>2. படைப்பாளி என்ற வகையில் தமது ஊடக மொழி தொடர்பான நல்ல விளக்கத்தைப் பெறத்தக்க விதத்தை விவரிப்பார்.<br>3. படைப்பாளி என்ற வகையில் மொழி ரீதியான விதிமுறைகளின் பாவனை முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார்.<br>4. ஆக்கச் செயற்பாடுகளின்போது பிரயோகிக்கக்கூடிய மொழி ரீதியான வெளிப்படுத்தல் முறையியல்களை படைப்புக்களின் ஊடாக வெளிக்காட்டுவார்.<br>5. படைப்பாற்றலுக்காக பிரயோகித்துள்ள வெளியீட்டு விதிமுறைகளை இனங்காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | 6. பல்வேறு கட்புல ஊடக வெளியீட்டு விதிகளை ஆக்குவதற்காகப் பிரயோகிக்கக் கூடிய முறைகளை இனங்காட்டுவார். | |
| | 11.3. அழகியல் சூழலை உள்வாங்கல் மற்றும் இரசித்தலுக்காக தேசிய படைப்பாக்கல் மூலாதாரங்களின் பிரயோகங்களுடன் கூடிய படைப்பாக்கல் வெளியீடுகளை முன்வைப்பதற்கான முனைப்பை வெளிப்படுத்துவார். | 11.3 ஆக்கபூர்வமான வெளிப்பாடுகளை முன்வைத்தல் (வெவ்வேறு முறைச் செயற்பாடுகள்)<br>1. அழகியற் சூழலை அனுபவிப்பது சார்ந்த ஆக்கியல் வெளிப்பாடுகளை அறிக்கை செய்தல்.<br>2. சுதேச ஆக்க மூலாதாரங்களைப் பயன்படுத்தி ஆக்கியல்பூர்வமான வெளிப்பாடுகளை முன்வைத்தல். | 1. படைப்பாக்கலின் போது தேசிய படைப்பாக்கல் மூலாதாரங்களின் பெறுமதியை மதிப்பார்.<br>2. தேசிய படைப்பாற்றல் மூலாதாரங்களுடன் தொடர்புடைய அழகுணர்வுகளுடன் கூடிய ஆக்கங்களை இரசிப்பார்.<br>3. படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்தக் கூடிய மக்கள் இலக்கிய வளங்கள் தொடர்பான விபரங்களை ஆய்வு செய்வார்.<br>4. படைப்பாக்கத்திற்காக பிரயோகிக்கக் கூடிய பல்வேறு தேசிய வளங்களை அல்லது மூலாதாரங்களை இனங்காண்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | 5. பல்வேறுபட்ட தேசிய வளங்கள் அல்லது மூலாதாரங்களைப் பயன்படுத்துவதன் ஊடாக பயனுறுதியுள்ள வெளிப்பாடுகளை முன்வைப்பார். | |
| | 11.4 பல்வேறு படைப்பாற்றல் நுட்பங்களை இனங்காண்பதன் மூலம் படைப்பாற்றத்துக்காகப் பிரயோகிக்கக்கூடிய முறைகளை அடிப்படை எண்ணக்கரு விளக்கத்துடன் வெளிப்படுத்தக்கூடிய முனைப்புகையைப் பெறுவார். | 11.4 ஊடகப் படைப்பாக்கமும் ஒழுக்கங்களும் சட்டமும்.<br>1. ஊடகப் படைப்பாக்கங்களும் ஒழுக்கங்களும்.<br>2. ஊடகப் படைப்பாக்கச் சட்டம்<br>3. ஊடகத்தை ஆக்கியல் பூர்வமாகப் பயன்படுத்துதல். | 1. ஊடக வெளியீடுகளின் தயாரிப்பிற்கான ஒழுக்கவிதிகளை இனங்காண்பார்.<br>2. ஊடக வெளியீடுகளின் தயாரிப்பிற்கான சட்டதிட்டங்களை உணர்ந்து கொள்வார்.<br>3. ஊடக வெளியீடுகளை தயாரிப்பதுடன் தொடர்புடைய ஒழுக்கவிதிகளினதும், சட்டதிட்டங்களினதும் அமுலாக்கத்தின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவார்.<br>4. ஊடக வெளியீடுகளை தயாரிப்பதுடன் தொடர்பான ஒழுக்கவிதிகளையும், சட்டதிட்டங்களையும் பின்பற்றுவார். | 05<br><br>12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 12.0 மாணவன் /மாணவி உடனடியாகத் துலங்கலை வெளிக்காட்டும் விமர்சனரீதியான பெறுநரது தேர்ச்சியை வெளிக்காட்டுவார். | 12.1 விமர்சனரீதியான பெறுநர்கள் பற்றிய பின்புல அறிவுடன் விமர்சன ரீதியில் ஊடகத் தகவல்களை நுகரும் தேர்ச்சியை மாணவன் / மாணவி வெளிக்காட்டுவார். | **12.0 பகுத்தறிவுள்ள பெறுநராதல்**<br><br>12.1 பகுத்தறிவுள்ள பெறுநராவ-தற்குரிய தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.<br>1. பகுத்தறிவுள்ள பெறுநர் - வரையறுத்தல்.<br>2. வெகுசன ஊடகங்கள் பகுத்தறிவு நோக்குதல்.<br>3. ஊடகங்கள் குறித்த எதிர்வினை - துலங்கல்களை முன்வைத்தல். | 1. தொடர்பாடல் செயற்பாடானது இருவழிச் செயற்பாடு என்பதை விளக்குவார்.<br>2. தொடர்பாடல் செயற்பாட்டில் தொடர்புறும் பெறுநர்களது வகைகளை விபரிப்பார்.<br>3. தொடர்பாடல் செயற்பாட்டில் ஊடகங்களது நோக்கங்களை ஒப்பிடுவார்.<br>4. பெறுநர்களது வகைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடுபவர் தம் வெளியீடுகளை அல்லது அளிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தை ஊடக வெளியீடுகள் மூலம் இனங்காட்டுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 12.2 தொடர்பாடல் மற்றும் பெறுநருகிடையே நிலவும் இடைத்தொடர்பை மாணவன்/ மாணவி பரிசீலிப்பார். | 12.2 வெகுசன ஊடகங்கள், புதிய ஊடகங்கள் பெறுதல்.<br>1. வெகுசன ஊடகங்களும் புதிய ஊடகங்களும் அவற்றின் சமூகப் பயன்பாடும்.<br>2. பெறுநர் பல்வகைமை<br>3. வெகுசன ஊடகங்களின் குறிக்கோள்களும், பெறுநர்கள் குறிக்கோள்களும்.<br>4. ஊடகத்துக்கும், பெறுநருக்கும் இடையே பரஸ்பர தாக்கங்கள். | 1. வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களின் பணியை விளக்குவார்.<br>2. வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களின் இயல்புகளை ஒப்பீட்டடிப்படையில் விபரிப்பார்.<br>3. வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் தாக்கங்களை ஆய்வுசெய்வார்.<br>4. பெறுநர்கள் ஊடகங்களுக்கு பின்னூட்டலை வழங்கும் பல்வேறு வடிவங்களை மதிப்பீடு செய்வார்.<br>5. வெகுசன ஊடக நோக்கங்கள் மற்றும் பெறுநர்களின் நோக்கங்களுக்கிடையேயான வேறுபாட்டைக் கற்பார்.<br>6. ஊடகங்கள் பெறுநர் மீதும் பெறுநர் ஊடகங்கள் மீதும் தாக்கம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை உறுதி செய்வார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 12.3 சிறுவர்களுக்கும் ஊடகங்களிற்கும் இடையிலான தொடர்பு மற்றும் அந்நியோன்ய தாக்கம் என்பவற்றை விமர்சன ரீதியாக இனங்காண்பார். | 12.3 பிள்ளையும், ஊடகமும்<br>1. பிள்ளையும் ஊடகப் பயன்பாடும்.<br>2. பிள்ளை ஒரு நுகர்வோர் என்ற வகையில்<br>3. பிள்ளையின்பால் ஊடகத்தின் தாக்கம்<br>4. ஊடகத்தின் வழியே கற்றல். | 1. சிறுவர்கள் ஊடகத்தைப் பயன்படுத்தும் விதத்தினை விபரிப்பார்.<br>2. வெவ்வேறு ஊடகங்கள் ஓர் நுகர்வோன் என்ற அடிப்படையில் சிறுவர்-களுக்கு வழங்கும் முக்கியத்துவத்தை பரீட்சிப்பார்.<br>3. ஊடகங்கள் சிறுவர் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை விமர்சன ரீதியாக பகுத்தாய்வார்.<br>4. ஊடகங்கள் சிறுவர்களுக்கான சேவைகளை வழங்க வேண்டிய விதத்தை விளக்குவார்.<br>5. சிறுவர் தம் கற்றல் நடவடிக்கைகளுக்காக ஊடகங்களை வினைத் - திறன்மிக்க வகையில் பயன்படுத்தக்கூடிய முறைகளை விளக்குவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 12.4 வெவ்வேறு ஊடக உபகரணங்களைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்கவிதிகளை, அற நெறிகளைப் பிரயோகிக்கும் ஆற்றலை மாணவன்/ மாணவி வெளிப்படுத்துவார். | 12.4 பகுத்தறிவு நோக்குதலும், ஊடக ஒழுக்கங்களும்.<br>1. கணினி ஒழுக்கங்கள்<br>2. கையடக்கத் தொலைபேசி (Cell phone) ஒழுக்கங்கள்<br>3. சமூக ஊடக (Social Media) ஒழுக்கங்கள். | 1. ஊடகப் பயன்பாட்டில் ஒழுக்க விதிகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விளக்குவார்.<br>2. கணிணிப் பயன்பாட்டின்போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க விதிகளை இனங்காட்டுவார்.<br>3. கையடக்கத்தொலைபேசிப் பாவனையின்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகள் தொடர்பாக சமூகத்தினருக்கு விழிப்புணர் வூட்டுவார்.<br>4. சமூக ஊடகப் (Social media) பாவனையின்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகளை இனங்காட்டுவார். | 03<br><br>**12** |

## கலைத்திட்ட மறுசீரமைப்பின் குறிக்கோள்கள்

| பழைய பாடத்திட்டத்தில் தேர்ச்சி மட்டம் | பழைய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | புதிய பாடத்திட்டத்தில் தேர்ச்சி மட்டம் | புதிய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | மாற்றஞ் செய்யப்பட்டதன் நோக்கம் |
|---|---|---|---|---|
| 7.1 | செய்தி அறிக்கைப்படுத்தலின் அடிப்படை அம்சங்கள் | 7.1 | 7.1 தகவல் அறிக்கைப்படுத்தல் | 1. முன்னைய பாடத்திட்டத்தில் ஊடகங்களுக்காக செய்தி அறிக்கைப்படுத்தலுக்கு வழங்கப்பட்டிருந்த முன்னுரிமையிலிருந்து விலகி, பாட விடயம் தொடர்பான அடிப்படையான அறிவூட்டத்தைப் பெறச் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தின் சிக்கலார்ந்தத்தன்மையைக் குறைத்து, பின்னணியை விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு தேர்ச்சி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.<br>2. புதிய பாடத்திட்டத்தில் கருப்பொருள் தொடர்பான பின்னணி அறிவை வழங்குவதற்காக 7.1 உம் தகவல் சேகரிப்பு நுட்பத்திறன் விருத்திக்காக 7.3 உம் சேர்க்கப்பட்டுள்ளன.<br>3. முன்னைய பாடத்திட்டத்தில் செய்தி எழுதுதலும் செவ்விதாக்கம் செய்தலும் அளிக்கையும் எனும் கருப்பொருளின்கீழ் இடம்பெற்றிருந்த பாட உள்ளடக்கமானது, புதிய பாடத்திட்டத்தில் 7.2 ஆம் தேர்ச்சி மட்டத்தின்கீழ் சிற்சில பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலே இல. 1 இல் குறிப்பிடப்பட்ட காரணம் அதற்கு ஏதுவாகின்றது. |

| பழைய பாடத்திட்டத்தில் தேர்ச்சி மட்டம் | பழைய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | புதிய பாடத்திட்டத்தில் தேர்ச்சி மட்டம் | புதிய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | மாற்றஞ் செய்யப்பட்டதன் நோக்கம் |
|---|---|---|---|---|
| 8.1 | அச்சு ஊடக அடிப்படை அம்சங்கள் | 8.0 | அச்சு ஊடகம் | புதிய பாடத்திட்டத்தின் 8.1 இன் கீழ் இலங்கையில் எழுத்துத்துறையின் வளர்ச்சி பற்றிக் கற்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. முன்னைய பாடத்திட்டத்தில் 8.3, அச்சு ஊடகத்தின் எளிய செயன்முறை எனும் விடய உள்ளடக்கத்துக்குப் பதிலாகப் புதிய பாடத்திட்டத்தில் 8.3 தேர்ச்சிமட்டத்தின் கீழ் 11 ஆம் தரப் பாடத்திட்டத்தின் பிரதான கருப் பொருள்களாக வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் ஆகியன உள்ளடக்கப் பட்டுள்ளன. இந்தப் பிரதானமான மூன்று வெகுசன ஊடகங்கள் தொடர்பாகவும் அடிப்படையான அறிவூட்டத்தை வழங்குவதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டு செய்தித் தாள்கள் பற்றிக் கூடுதலான கவனஞ் செலுத்தி விடய உள்ளடக்கம் மாற்றம் பெற்றுள்ளது.<br><br>முன்னைய பாடத்திட்டத்தில் பாடவிடயச் சுமையைக் குறைப்பதற்காக அப்பாடத்திட்டத் தின் 8.4 அச்சு ஊடகத்தொழில் எனும் விடயப்பரப்பு நீக்கப்பட்டுள்ளது. |

| பழைய பாடத்திட்டத் தில் தேர்ச்சி மட்டம் | பழைய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | புதிய பாடத்திட்டத் தில் தேர்ச்சி மட்டம் | புதிய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | மாற்றஞ் செய்யப்பட்டதன் நோக்கம் |
|---|---|---|---|---|
| 9.0 | வானொலி ஊடக அடிப்படை அம்சங்கள் | 9.0 | வானொலி ஊடகம் | இக்கருப்பொருளின்கீழ் வானொலி ஊடக தொழில் தேர்ச்சி விருத்திக்காக வழங்கப்பட்டிருந்த முன்னுரிமைப்படுத்தலில் இருந்து விலகி, வானொலியைப் பயனுறுதியாகப் பயன்படுத்த வழிப்படுத்தும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. எனினும் பாடசாலை மட்டத்தில் வானொலித் துறை நுட்பத்திறன்களை வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான பாடப்பகுதிகள் உள்ளடக்கப் பட்டுள்ளன. |
| 10.0 | சினிமா, தொலைக்காட்சி ஊடக அடிப்படை அம்சங்கள் | 10.0 | தொலைக்காட்சி ஊடகம்<br>1. தோற்றம் பெற்றவை - | 1. புதிய கலைத்திட்டத்தில் அச்சு ஊடகம், தொலைக்காட்சி, வானொலி ஆகியன பிரதான கருப்பொருள்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கலைத்திட்டத்தின் சிக்கல் தன்மையைக் குறைப்பதற்காக சினிமா பகுதி நீக்கப்பட்டுள்ளது.<br>2. தொலைக்காட்சி ஊடக நுட்பத்திறன்களை விருத்தி செய்ய முன்னர் தொலைக்காட்சி ஊடகம் பற்றிக் கற்றாய வழிப்படுத்துவதன் அவசியத்தின் சமகால முக்கியத்தைக் கருத்திற் கொண்டு அதற்கு ஏற்றவாறு 10.3, 10.4 ஆகிய பாடப்பரப்புக்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. |

| பழைய பாடத்திட்டத்தில் தேர்ச்சி மட்டம் | பழைய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | புதிய பாடத்திட்டத்தில் தேர்ச்சி மட்டம் | புதிய பாடத்திட்டத்தில் கருப்பொருள் | மாற்றஞ் செய்யப்பட்டதன் நோக்கம் |
|---|---|---|---|---|
| 11.0 | வெளியீட்டுச் சுதந்திரமும் வெளியீட்டு உரிமையும் | 11.0 | ஆக்கியல் தொடர்பாடலும் ஒழுக்கங்களும் சட்டமும் | இக்கருப்பொருளின் சிக்கல்தன்மை பற்றிய முன்வைக்கப்பட்ட கருத்துக்களைக் கவனத்திற் கொண்டும் மாணவரை மேன்மேலும் ஆக்கியலின் பால் வழிப்படுத்துவதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டும் காணப்பட்ட கருப்பொருளுக்குப் பதிலாக ஆக்கியல்புத் தொடர்பாடல் ஒழுக்கங்களும் சட்டமும் எனும் கருப்பொருள் சேர்க்கப் பட்டுள்ளது. அதில் அடங்கியிருந்த, வெளியீட்டுச் சுதந்திரமும் வெளியீட்டு உரிமையும் எனும் கருப்பொருளை அத்தியா வசியமான பாடப்பகுதிகள் என்னும் புதிய கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. |
| 12.0 | விமர்சனரீதியான (பகுத்தறிவு ரீதியான) பெறுநர்கள் | 12.0 | பகுத்தறிவு ரீதியான பெறுநர்த்துவம் | விடய உள்ளடக்கத்தின் சிக்கல் தன்மையைக் குறைத்து முன்னர் விடய உள்ளடக்கத்தில் இருந்த அதே பாடப்பகுதிகளே இயங்கும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, முன்னைய பாடத்திட்டத்தின் 12.4 இன் கீழ் இருந்த வெகுசன ஊடகத்தின் தாக்கம் மற்றும் பெறுநரின் துலங்கல்கள் தொடர்பான எளிமையான ஆய்வு எனும் விடய உள்ளடக்கம் நீக்கப்பட்டுள்ளது. சமகாலத் தேவையைக் கருதி 12.1 விமர்சன ரீதியான தன்மையும் ஊடக ஒழுக்கங்களும் எனும் பாடப்பரப்பு புதிய கலைத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. |

**தேர்ச்சி 7.0** :- மாணவன்/மாணவி தகவல் தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்று தகவல் திரட்டல் மற்றும் தகவலை முன்வைக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 7.1 தகவலை அறிந்துக்கொள்வதன் அவசியத்தை இணங்கண்டு தகவல் பணியின் வளர்ச்சியை விளக்குவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தகவல் என்றால் என்ன எனச் சரியாக விளக்குவார்.
2. தகவலின் வகைப்பாட்டை உதாரணங்களுடன் விளக்குவார்.
3. தகவல் அறிந்துகொள்வதன் அவசியத்தை உரிய காரணங்களுடன் விபரிப்பார்.
4. மனிதனுக்கும், தகவலுக்கும் இடையிலான இடைத்தொடர்பை பரிசீலனை செய்வார்.
5. ஆதிகாலம் முதல் தற்காலம் வரை சமூக மாற்றங்களின்போது மனிதன் தகவலைப் பயன்படுத்தும் விதம் பற்றி ஆய்வு செய்வார்.
6. தகவல் அறிந்துகொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு வழிமுறைகளை இனங்காண்பார்.

**பாடவிருத்திக்கான அறிவுறுத்தல்** :-

- தகவல் என்றால் என்ன என்பதை யாதென விளக்குவதற்குரிய ஆக்க ரீதியான பிரவேசமொன்றைப் பயன்படுத்துதல். இங்கு தகவல் பரிமாற்றம் நிகழும் பல்வேறு முறைகள், மனிதர்கள் தகவல் அறிந்துக்கொள்வதில் காட்டும் ஆர்வம் முதலியவற்றை விளக்குவதற்கு போலச்செய்தல் அல்லது நடித்தற் செயற்பாடு (Role play), வீடியோ காட்சிகள் முதலான உபாயங்களைப் பயன்படுத்துதல்.

  **உதாரணம்** -

  திடீர் சம்பவம் ஒன்று நிகழ்ந்த வேளையில் வீடொன்றில் இல்லாதவார்கள் அது தொடர்பான தகவல்களைக் கண்டறியச் செயற்படுதல். தகவல் என்றால் என்ன? எனும் தலைப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடுதல்.

  அதன் மூலம் மாணவர்கள் தகவல் பற்றிய எளிய விளக்கத்தைப் பெறும்படி செய்க. பின்னர் ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் தகவல் என்பதன் வரைவிலக்கணத்தை முன்வைக்க.

  | |
  |---|
  | தகவல் என்பது, யாதேனுமொரு விடயம் தொடர்பான விளக்கமின்மையை நிவர்த்தி செய்து போதிய விளக்கம் பெறத் தேவையான அறிவு ஆகும். |

- தகவலைக் கண்டறிவதற்காக மிருகங்கள் தமது உணர்வுவழி அல்லது மோப்ப சக்தியைப் பயன்படுத்துவதோடு மனிதர்கள் தமது ஐம்புலன்களைப் பயன்படுத்துவர்.
- தகவல் மூலமாக அறிவு விருத்தியாவதோடு, அறிவின் மூலம் தகவல்கள் உருவாக்கப்படும்.

- தகவல்கள் பல்வேறு வகைப்படும் என்பதை விளக்குதல்.

  நபர்கள்

  இடங்கள்

  சம்பவங்களை

  அடிப்படையாகக் கொண்டு தகவல்கள் உருவாகும் என்பதை விளக்குதல்.
- பல்வேறுப்பட்ட தகவல்களைத் தேடியறிய உசிதமான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல். இதற்காக மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்கள் (நபர்கள், இடங்கள், சம்பவங்கள்) தொடர்பான தகவல்களைத் திரட்டி, அவற்றை முன்வைக்கும்படி மாணவர்களை வழிப்படுத்துதல்.
- பல்வேறு விதமான தகவல்களைத் தெரிவு செய்து மாணவர்கள் அவற்றை ஆக்கரீதியான முறையில் சுவர்களில் காட்சிப்படுத்தும்படி வழிப்படுத்துதல்.
- மாணவர்கள் குறித்த நாளில் அல்லது அந்தக் கிழமையிலே அறிந்து அல்லது தெரிந்து கொண்ட பல்வேறு தகவல்களை வெளிப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்.
- அத்தகவல்கள் மத்தியிலிருந்து முக்கியமான தகவல்களைத் தெரிவுசெய்து, அவற்றை மாணவர்களது விருப்பத்தின் அடிப்படையில் முன்வைப்பதற்கு வழிவகை செய்தல்.
- தகவலின் அவசியம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.

  இங்கு

  - தாகமாயுள்ளது, தண்ணீர் எங்கே இருக்கிறது?
  - எனக்கு உடல் நலமில்லை, மருந்து எங்கே வாங்குவது?
  - பிரதேசத்தின் நீர்மூலங்களைக் கண்டறிவது எவ்வாறு?

    மேற்குறிப்பிட்டவாறு வினாக்கள் மூலம் கலந்துரையாடல் செய்யப்படலாம்.
  - தனிநபர் சார் தகவல்கள் (இருப்பு/அறிவு/பொழுதுபோக்கு)
  - சமூகம்சார் தகவல்கள் (நல்லுறவு/பண்பாடு) என வகைப்படுத்திக் கலந்துரையாடுதல்.
- மனிதன் ஆதிகாலம் தொட்டு தற்காலம்வரை தகவல் அறிந்துக்கொள்வதில் ஈடுபட்டவிதம் பற்றி விளக்குதல்.
  - இங்கு மனிதன் இயற்கையாகவே தகவல் அறியும் ஓர் பிராணி என்பதை விளக்குதல்.
  - முற்காலத்தில் மனிதன் அடிப்படைத்தகவல்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் செலுத்தினான். பிற்காலத்தில் பாரியளவு தகவல் வழங்கும், மற்றும் தகவல் ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுப்பட்டான் என்பதை விளக்குதல்.
- தகவல்கள் பல்வேறு இயல்புகளைக் கொண்டவை தகவல் என நோக்குதல் வேண்டும். உதாரணம் :
  - அடிப்படைத்தேவைகள் (உணவு, உடை, உறையுள், அணிகலன்கள்) தொடர்பான தகவல்கள்
  - காலநிலை தொடர்பான தகவல்கள்
  - அரசியல் தகவல்கள்
  - உள்நாட்டுத் தகவல்கள்
  - புராதன/ தொன்மை பற்றிய தகவல்கள்
  - அன்றாட வாழ்வில் மக்களுக்குத் தேவைப்படும் தகவல்கள்

- ஆதிகாலம் முதல் தற்காலம் வரை சமூகமாற்றங்களின்போது மனிதன் தகவல் அறிந்துக்கொள்ளும் விதம்பற்றி மாணவர்கள் ஆய்வுசெய்யும்படி வழிப்படுத்துக.

  இங்கு –
  - சமூகப்பிராணி என்ற அடிப்படையில் மனிதனுக்கு தகவல் அறிந்துக்கொள்வதில் உள்ள அவசியம் மற்றும் மனிதனுள் இயற்கையாகவே காணப்படும் தகவலறியும் ஆர்வம் என்பன அடிப்படையாகவே அமைந்ததுள்ளன என்பதை விபரித்தல்
  - பல்வேறு சமூக மாற்றங்களின்போது மனிதன் தகவல் அறிந்துக்கொண்ட விதங்கள் பல்வேறு வகைப்பட்டன என்பதை விளக்குதல்.
- கீழ்க்காணும் சம்பவங்களை நடித்துக்காட்டும்படி மாணவர்களைப் பணித்தல்.
  - ஆதி மனிதன் தகவல் அறிந்துக் கொண்ட விதம்
  - கிராமத்தவர்கள் தகவல் அறிந்துக்கொண்ட விதம்
  - தற்கால நவீன மனிதன் தகவல் அறிந்துக்கொள்ளும் விதம்

## முக்கியமான பதங்கள் (Key words) :

- தகவல் (Information)
- தகவல் செயற்பாடு
- தகவல் மூலங்கள் (Source of information)
- தகவல் சமநிலை (Balance of information)
- தகவல் அசமநிலை/சமனற்றநிலை (Imbalance of information)
- தகவல் ஆய்வு செய்தல்/தேடல் (Analyzing information)
- தகவல் தொழில்நுட்பம் (Information Technology)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- ஆதிகாலம் முதல் தற்காலம் வரை மனிதர்கள் தகவல் அறிந்துக்கொள்ளுவதற்காக பயன்படுத்திய பல்வேறு வழிமுறைகளை வெளிக்காட்டும் படங்கள், வீடியோ காட்சிகள்.
- தகவல்களின் பல்வேறு வகைப்பாட்டை வெளிக்காட்டும் கற்பித்தல் வளங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தகவல் என்றால் என்ன என்பதற்குரிய அடிப்படை விளக்கத்தினை முன்வைப்பார்.
- தகவல் அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை இனங்காட்டுவார்.
- தகவல் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகளைப் பெயரிடுவார்.
- தகவல் பணியானது ஆதிகாலம் முதல் தற்காலம் வரை சிக்கலான ஒன்றாக மாறியுள்ளமையினைப் பரீட்சிப்பார்.
- தெளிவான தகவல்களை வழங்குவதன் முக்கியத்துவத்தினை விளக்குவார்.

**தேர்ச்சி 7.0** :- மாணவன்/மாணவி தகவல் தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்று தகவல் திரட்டல் மற்றும் தகவலை முன்வைக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 7.2 நிகழ்வுகள், தகவல் மற்றும் செய்தி தொடர்பான அடிப்படை விளக்கத்தினை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. நிகழ்வுகள், தகவல் மற்றும் செய்திக்கிடையிலான வேறுபாட்டை விளக்குவார்.
2. செய்தியை அறிந்து கொள்வதன் அவசியத்தை விளக்குவார்.
3. செய்தியின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செய்தியினை வகைப்படுத்துவார்.
4. செய்தியின் நன்மதிப்பின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குவார்.
5. செய்தியொன்றினை முன்வைக்கும் நுட்ப முறைகளை வெளிக்காட்டுவார்.

**பாடவிருத்திக்கான அறிவுறுத்தல் :-**

- செய்தி தொடர்பான அறிமுகத்தினை வழங்க உரிய பாடப் பிரவேசத்தைப் பயன்படுத்துக.
- பாடப்பிரவேசத்தினை அடிப்படையாகக்கொண்டு நிகழ்வுகள், தகவல் மற்றும் செய்திக்கிடையிலான வேறுபாடுகளைக் கலந்துரையாடுக.
- நிகழ்வுகள், தகவல் மற்றும் செய்திக்கிடையிலான வேறுபாட்டை மேலும் உறுதி செய்துகொள்வதற்காகச் சம்பவங்களை நடித்துக்காட்டல், சித்திரங்கள் மூலம் நிகழ்வுகளை உருவகித்தல் முதலான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துக.
- தற்காலத்தில் செய்தி அறிந்துக்கொள்ளும் பல்வேறு வழிமுறைகள் தொடர்பில் மாணவருடன் கலந்துரையாடுக.
- செய்தியை அறிந்துகொள்வதன் அவசியத்தினை உறுதிசெய்யும் வகையில் கலந்துரையாடலை நெறிப்படுத்துக.
- ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் செய்திகளின் உள்ளடக்கத்தை அடிப்படையாக கொண்டு செய்திகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**வன்செய்தி** (Hard news)- உடனடி அவதானத்தைப் பெற்று, பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவல்ல செய்தி.

உதாரணம் - கொலை, குற்றம், யுத்தத்தகவல்கள், இயற்கை அனர்த்தங்கள், அரசியல் செய்திகள் என்பன. பொதுவாக இவ்வாறான செய்திகள் பத்திரிகை ஊடகத்தில் முதற்பக்கத்திலும், இலத்திரனியல் ஊடகத்தில் பிரதான தலைப்புச் செய்திகளிலும் வெளிப்படுத்தப்படும்.

**மென்செய்தி** (Soft news)- பெரும்பாலான மக்கள் மத்தியில் விசேடமான தாக்கத்தைச் செலுத்தாத சாதாரண செய்தியாகும். இங்கு சாதாரணமாக நிகழும் ஒரு சம்பவம் அவ்வாறே அறிக்கையிடப்படும்.

உதாரணம் - பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் நாளை முதல் ஆரம்பமாகும் என்ற செய்தி (வன்செய்தி, மென்செய்தி என்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செய்திகளை வகைப்படுத்தல் கடினம்.) செய்தியை பெறும்நபர், அவர் சார்ந்த பண்பாடு மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வகைப் பிரிப்பு மாற்றமடையக்கூடும்.

- செய்திப்பத்திரிகைகள் சிலவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்திகள் சிலவற்றைச் சேகரித்து, அவற்றை வகைப்படுத்தும்படி மாணவரைப் பணித்தல்.
- செய்தி ஒன்றின் பெறுமதியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அறிமுகம் செய்தல்.
  - பல்வேறு ஊடகங்களில் வெளியிடப்பட்ட ஒரு செய்தியினை அல்லது பல செய்திகளைப் பார்வையிட்டு, அவற்றுள் மேற்குறிப்பிட்டுள்ள பண்புகளைக் கொண்ட செய்திகளை இனங்கண்டு, அவற்றை வகுப்பறையில் முன்வைக்கும்படி மாணவர்களை வழிநடத்துதல்.
- செய்தி ஒன்றினை முன்வைக்கும் நுட்பமுறைகளை விருத்தி செய்யப் பொருத்தமான செயற்பாடுகளில் மாணவர்களைத் தொடர்ந்து ஈடுபடுத்துதல்.
  - இதன்போது மாணவர்களால் எழுதப்பட்ட செய்திகளையும் வகுப்பறையில் முன்வைப்பதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்குதல்.
  - பாடசாலை வானொலி ஊடாகச் செய்தி வாசிப்பதற்குரிய ஒழுங்குகளை மாணவர்களுக்கு வழங்குதல்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- தகவல் (Information)
- நிகழ்வுகள் (Events)
- வன் செய்தி (Hard news)
- மென் செய்தி (Soft news)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- பல்வேறு ஊடகங்களில் செய்தி முன்வைக்கப்படும் முறை தொடர்பான கற்றல் வள மாதிரிகள்.
- செய்திகளின் பெறுமதி தீர்மானிக்கப்படுகையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (வீடியோக்கள், பிரசுரமாதிரிகள் - பாடநூலில் குறிப்பிட்டுள்ளவாறு) அவரவர் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, பெறப்படுவன.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- நிகழ்வுகள், தகவல் மற்றும் செய்திகளுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குவார்.
- செய்தியை அறிந்துக்கொள்வதன் அவசியத்தை மதிப்பிடுவார்.
- செய்திகளை வகைப்படுத்தி அவற்றிற்குரிய உதாரணங்களை வழங்குவார்.
- செய்தியின் பெறுமதியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண்பார்.
- செய்தி எழுதும் ஆற்றல் மற்றும் செய்தி முன்வைக்கும் ஆற்றலை மதிப்பிடுவார்.

**தேர்ச்சி 7.0** :- மாணவன்/ மாணவி தகவல் தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்று தகவல் திரட்டல் மற்றும் தகவலை முன்வைக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 7.3 தகவல் திரட்டும் நுட்பமுறைகள் பற்றிய விளக்கத்துடன் தகவல் திரட்டும் ஆற்றலை வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தகவல் திரட்டலின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு தகவல் மூலங்களை இனங்காண்பார்.
2. தகவல் திரட்டும் நபர் ஒருவரிடம் காணப்படவேண்டிய பண்புகளை மதிப்பிடுவார்.
3. தகவல் திரட்டும் பல்வேறு நுட்பமுறைகளை விளக்குவார்.
4. தகவல் திரட்டும்போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்கநெறிகளைக் கவனத்திற்கொள்வார்.
5. தகவல் தேடுதலின் போது பயன்படுத்தப்படும் உபாயங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வார்.

**பாடவிருத்திக்கான அறிவுறுத்தல் :-**

- தகவல் திரட்டும் பல்வேறு சந்தர்ப்பங்களை மாணவர்கள் இனங்கண்டுகொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- இதன்போது தொழில்ரீதியாக தகவல் திரட்டுதலில் ஈடுபடுபவர்கள் பற்றிய அறிமுகத்தினை மாணவர்கள் பெறும்படி செய்தல்.
- வெற்றிகரமாக தகவல் திரட்டுவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் என்பது தொடர்பில் கலந்துரையாடுதல்.
- அதன்படி தகவல் திரட்டுபவரிடம் காணப்பட வேண்டிய பண்புகளை அடையாளங் காணுதல்.

  (உதாரணம் - ஆர்வமிக்கவராகக் காணப்படல்,தகவல் மூலங்களை இனங்காணல், சம்பவங்களை அவதானித்தல், கேட்டல், பேச்சு)
- தகவல் திரட்டுதலின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு நுட்ப முறைகளை மாணவர்கள் இனங்காணும்படி செயதல்.
- இதன்போது முதற்படியாக ஆசிரியரால் கூறப்படும் பல்வேறு தகவல்களை மாணவர்கள் திரட்டும்படி பணித்தல்.

  உதாரணம் :-

  பாடசாலை நூலகம் பற்றிய தகவல்களைத் திரட்டும்படி பணிக்குக. இதன்போது நூலகத்தில் காணப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை, புத்தகங்களின் வகைகள், செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், வாசிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டப்படும் புத்தகங்கள் போன்ற தகவல்களைத் திரட்டுதல்.

- அடுத்து, தகவல் திரட்டுவதற்காக மாணவர்கள் பயன்படுத்திய நுட்பமுறைகளைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மேலும், முறைசார்ந்து தகவல்கள் திரட்டும் நுட்பமுறைகள் மற்றும் விதிமுறைகளை மாணவர்கள் அறிந்துக்கொள்வதற்குரிய வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.
- தகவல் திரட்டும் நுட்பமுறைகள் மற்றும் விதிமுறைகள்.
  - கலந்துரையாடல்கள்
  - வினாப்பத்திரம் அல்லது வினாக்கோவை
  - அவதானித்தல்
  - ஆவணங்களைப் பரீட்சித்தல்
  - மூளைப்புயல் (Brain Storming)
- வினைத்திறன் மிக்க நுட்பமுறையினைப் பயன்படுத்தி, மாணவர்களைத் தகவல் தேடும்படி பணித்தல்.
- தகவல் திரட்டுதல் தொடர்பான ஒழுக்கநெறிமுறைகள் பற்றிய அடிப்படை விளக்கத்தினை மாணவர்கள் பெற வழிவகுத்தல். மேலும், மாணவர்களிடத்தே தகவல் திரட்டும் நுட்ப முறைகளை விருத்தி செய்வதற்காக நடித்துக் காட்டல் (Role play) முதலான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுப்படுத்துதல்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- தகவல் வகைகள் (Types of information)
- தகவல் திரட்டுதல் (Gathering information)
- நுட்பமுறைகள் (Techniques)
- தகவல் ஒழுக்கநெறிமுறை (Ethics of information)
- செய்தியை உணர்தல் (News sense)
- நேர்காணல்கள் (Interviews)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தகவல் திரட்டுபவரிடம் காணப்படவேண்டிய பண்புகள், தகவல் திரட்டும் நுட்ப முறைகள் மற்றும் தகவல் திரட்டுதல் தொடர்பான ஒழுக்கநெறிமுறைகள் உள்ளடங்கிய கற்பித்தல் வளங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தகவல் திரட்டுதலின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு தகவல் மூலங்களை மாணவன் அல்லது மாணவி பெயரிடுவார்.
- வெற்றிகரமாக தகவல் திரட்டுதலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காட்டுவார்.
- தகவல் திரட்டுதலின்போது பயன்படுத்தப்படும் பல்வேறு தகவல் மூலங்களை விளக்குவார்.
- தகவல் திரட்டுதல் தொடர்பான பல்வேறு நுட்பமுறைகள் ஒழுக்கநெறிமுறைகள் பற்றிய விளக்கத்துடன் மாணவன் அல்லது மாணவி தகவல் திரட்டுவார்.

**தேர்ச்சி 7.0** :- மாணவன்/ மாணவி தகவல் தொடர்பான அடிப்படை விளக்கத்தைப் பெற்று தகவல் திரட்டல் மற்றும் தகவலை முன்வைக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 7.4 தகவல் அறிக்கையிடல், தகவல் முன்வைக்கும் நுட்பமுறைகள் மற்றும் விதிமுறைகள் பற்றிய போதிய விளக்கம் மாணவரிடத்தே காணப்பட வேண்டும். அதனூடாகத் தகவல் முன்வைக்கும் தேர்ச்சியினை மாணவன்/ மாணவி வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தகவல் அறிக்கையிடலின் அவசியத்தை இனங்காட்டுவார்.
2. தகவல் முன்வைக்கும் பல்வேறு வடிவங்களை விளக்குவார்.
3. தகவல் முன்வைக்கும் நுட்பமுறைகளை விளக்குவார்.
4. தகவல் அறிக்கையிடலின் அடிப்படை விழுமியங்களைப் பயன்படுத்தி, தகவல் ஒன்றை வெற்றிகரமாக அறிக்கையிடுவார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- தகவல் அறிக்கையிடலின் அவசியம் தொடர்பில் கலந்துரையாடுதல்.
- தகவல் அறிக்கையிடலின்போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகளை இனங்காட்டுதல்.
- தகவல் அறிக்கையிடும் பல்வேறு முறைகளை மாணவர்கள் கற்பதற்குரிய வழிகளை ஏற்படுத்துதல்.
    - நேரடி அறிக்கையிடல் (சரியாக, எளிமையாக, விளக்கமாக, உண்மையான முறையில் அறிக்கையிடல்)
    - படைப்பாக்க ரீதியாக அறிக்கையிடல் ஆகியவை நிகழும் முறைகள், நுட்பங்களை இனங்காட்டுதல்.
- தகவல் முன்வைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகளை மாணவர்கள் கற்பதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்குதல்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- தகவல் அறிக்கையிடல் (Reporting information)
- தகவல் முன்வைத்தல் (Presentation of information)
- செய்தி ஆக்கம் (News writing)
- ஆக்கரீதியான கட்டுரை (Creative writing)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தகவல் அறிக்கையிடும் பல்வேறு வடிவங்களை விள்கருவதற்குரிய உதாரணங்களைக் கொண்ட செய்திப்பத்திரிகைகள் மற்றும் ஏனைய செய்திப் பிரசுரங்கள்
- செய்திக் கட்டுரை எழுதும் விதிமுறைகள், நுட்பமுறைகள், ஆக்கரீதியான கட்டுரை எழுதும் விதிமுறைகள், நுட்ப முறைகள் உள்ளடங்கிய ஆசிரியர் கற்பித்தல் வளங்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தகவல் அறிக்கையிடலின் அவசியத்தை உறுதி செய்வார்.
- தகவல் அறிக்கையிடும் பல்வேறு நுட்பமுறைகளைப் பரிசீலனை செய்வார்.
- தகவல் அறிக்கையிடலின்போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகளை இனங்காட்டுவார்.
- தகவல் அறிக்கையிடும் ஆற்றலை மதிப்பிடுவார்.

**தேர்ச்சி 8.0** :- அச்சு ஊடக வெளியீடுகள் தொடர்பில் செய்திப் பத்திரிகைகள், மற்றும் அச்சு ஊடக பிரசுரங்கள், அவற்றின் உள்ளடக்கத்திற்கான விளக்கத்துடன் செய்திப் பத்திரிகை ஆக்கம் தொடர்பான நுட்பங்களின் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 8.1 எழுத்துக் கலை வளர்ச்சி மற்றும் அச்சு ஊடக தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பில் அடிப்படைத் தகவல்களை ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்** :- 05

**கற்றற்பேறுகள்** :-

1. தொடர்பாடல் ஊடகங்களில் ஒன்றான அச்சு ஊடகப் பாவனையின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுவார்.
2. உலக ரீதியாக அச்சு ஊடகத் தோற்றம் மற்றும் வளர்ச்சிப் போக்குகளைக் கண்டறிவார்.
3. இலங்கையின் புராதன காலத்தில் எழுத்துப் பயன்பாட்டின் வளர்ச்சியின் போக்கைக் கண்டறிவார்.
4. இலங்கையின் பழமையான எழுத்துரு ஆவணங்களில் வளர்ச்சி ஏற்பட்ட முறை தொடர்பில் விபரிப்பார்.
5. அன்றும் இன்றும் அச்சுத் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்ற போக்குகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்** :-

- ஒலி-ஒளி காட்சி அல்லது படங்களைக் கொண்டு முற்காலத்திலிருந்து இன்று வரை ஆவணங்கள், அச்சுவெளியீடுகள் பெற்றுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகக் காட்சிப்படுத்தல்.

  உதாரணம் :

  | | |
  |---|---|
  | ஓலைச் சுவடிகள் | குகை ஓவியங்கள் |
  | கல் வெட்டுக்கள் | புத்தகங்கள் |
  | காலனித்துவ கால ஆவணங்கள் | அச்சுக்கள் |
  | செய்தித் தாள்கள் | இலத்திரனியல் அச்சுக்கலை |

- மேற்படி ஆவணங்கள் இல்லாத நிலையில் பரந்த அளவில் அச்சு ஆவணங்களைக் கொண்ட நூலகங்களில் புத்தகங்களைப் பார்வையிடுவதற்காக மாணவர்களை வழிப்படுத்தல் அல்லது தொடர்பான படங்களைக் காட்டுதல்.
- பாடப்பிரவேசத்தைத் தொடர்புபடுத்தி, அன்று முதல் இன்று வரை பயன்படுத்தப்பட்ட பல்வேறு விதமான ஆவணங்கள் மற்றும் ஆவணப்படுத்தும் முறைகள் தொடர்பிலான கலந்துரையாடுதலில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- அச்சு ஊடகத்தைத் தெரிந்து கொள்வதற்காக மாணவர்களிற்கு வாய்ப்பு அளித்தல்.
- அச்சுக் கூடம் மற்றும் அச்சு ஊடகம் என்பது தொடர்பான ஆவணங்களுடன் தொழில்நுட்பமும் இணைந்த நிலையில் தோன்றிய அச்சக விசேடமான அம்சமாக அதிகளவிலான பிரதிகள் பெறுவதற்கும் பாரிய அளவிலான உற்பத்தியை இலகுவில் மேற்கொள்வதற்குமான இயலுமையைக் காட்டுதல்.

- அச்சு வடிவில் புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்திப் பத்திரிகைகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றைத் தயாரிக்க

  இங்கு இலங்கையில் எழுத்துரு அல்லது அச்சு ஊடக வளர்ச்சி கீழ்வரும் முறையில் காலப் பகுதிகளாக வேறுபடுத்தப்படுகிறது.

  1. புராதன காலம்
  2. மத்திய காலம்
  3. நவீன காலம்

- அவ்வவ் யுகங்களுக்குரிய காலங்களுக்குரிய அச்சு ஆவணங்களுடன் தொடர்புடைய படங்கள், எழுத்து ஆவணங்களைத் தேடவும், சேகரிக்கவும் மாணவர்களை மேலும் வழிப்படுத்துதல்.
- இலங்கையின் புராதன காலத்திற்குரிய ஆவணங்கள் தொடர்பிலான தகவல்களைக் கண்டறிய வாய்ப்பளித்தல். இவ் ஆவணங்கள் பாதுகாப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- தொடர்பாடல் ஊடகம் என்ற வகையில் அச்சு ஊடகப் பாவனையின் முக்கியத்துவம் தொடர்பாகக் கருத்துக்களை முன்வைக்க மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.

  உதாரணம் :

  1. யாதாயினும் ஒன்று பற்றி குறிப்பெடுத்து நீண்டகாலத்திற்குப் பாதுகாத்துக் கொள்ள முடிதல்.
  2. திரும்பத் திரும்ப பாவனைக்கு உட்படுத்தக் கூடியதாக இருத்தல்.
  3. பெருந்தொகையானோருக்கு ஒரே தடவையில் தகவல்களை வழங்கக் கூடியதாக இருத்தல்.
  4. சிக்கலான கருத்துக்கள், தகவல்கள், பகிர்தல் மூலம் அறிவு விரைவாகப் பரவுதல்.

கீழ்வரும் விடயங்களைக் கற்றுக் கொள்வதற்குச் சந்தரப்பம் அளித்தல்.

- எழுத்துருக்களில் ஆரம்பமாகி படிப்படியாகத் தொடர்பாடல் நுட்பங்கள் விருத்தி அடைவதுடன் அச்சு ஊடகம் தோன்றிய முறை மற்றும் எழுத்துரு நுட்பவியல் ஆகியவற்றுடன் தொடர்பான விருத்திகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளின் மீது கவனம் செலுத்த வழிப்படுத்துதல்.
- ஒவ்வொரு காலப்பகுதிகளுடன் தொடர்பான எழுத்துருக்களுடன் சம்பந்தப்பட்ட படங்கள், எழுத்தாக்கங்களைத் தேடிச் சேகரிப்பதற்கு மேலும் வழிப்படுத்துதல்.
- காலனித்துவக் காலத்தில் அச்சுக்கலை ஆரம்பமான முறையையும் வளரச்சியையும் குறிப்பிடுதல்.
- நவீன கால அச்சு ஊடகங்கள் பெற்றுக் கொண்டுள்ள முன்னேற்றகரமான அம்சங்கள் தொடர்பான தகவல்களை ஆவணப்படுத்துவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
  - அச்சுத் தொழில்நுட்ப ரீதியாக நாம் பெற்றுள்ள முன்னேற்றங்கள் அடிப்படையிலான அறிமுகம்.
  - அச்சுக் கலை முறையியல்களை இனங்காணுதல் - எழுத்து அச்சுக்கள், ஓவ்செற் அச்சுப்பதிப்பு (மறுதோன்றி), இலத்திரனியல் அச்சுப்பதிப்பு (எண்சார் அச்சுப்பதிப்பு)

## முக்கியமான பதங்கள் (Key words) :

- எழுத்து அச்சுப்பதிப்பு (Letter press)
- ஓவ்செற் அச்சுப்பதிப்பு (மறுதோன்றி) (Offset Printing)
- இலத்திரனியல் அச்சுப்பதிப்பு (எண்சார் அச்சுப்பதிப்பு) (Digital Press)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- ஆரம்பகாலத்தில் பாவனையிலிருந்த பல்வேறு ஊடகங்களுடன் தொடர்புடைய பட மாதிரிகள், ஒலி-ஒளி காட்சிகள்.
- எழுத்து ஊடக நுட்பங்கள் மற்றும் அதன் வளர்ச்சியின் பேறு காரணமாக பெருமளவிலான அச்சுப் பிரதிகள் உருவாக்கப்படும் முறை என்பவற்றைக் காட்டும் ஒலி-ஒளிக் காட்சிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- உலகின் அச்சு ஊடகத் தோற்றம் மற்றும் வளர்ச்சி ஏற்பட்ட முறை தொடர்பாக விளக்குவார்.
- இலங்கையின் புராதன காலத்தின் எழுத்தாவணங்களைப் பெயரிடுவார்.
- இலங்கையின் புராதன யுகத்திலிருந்து ஆவணங்கள் தொடர்பான தகவல்களை முறையாக ஒழுங்கமைத்து முன்வைக்கும் திறன்களை வெளிப்படுத்துவார்.
- நவீன அச்சகத் தொழில்நுட்பத்தின் முறைகளைப் பெயரிடுவார்.
- நவீன அச்சகத் தொழில்நுட்பத்தின் புரட்சி காரணமாக ஏற்பட்ட நடவடிக்கைகளை மதிப்பிடுவார்.
- அச்சுத் தொழில்நுட்பப் போக்கின் அடிப்படையில் மாணவர்களின் ஆக்கச் செயற்பாடுகளைக் கணிப்பீடு செய்வார்.

**தேர்ச்சி 8.0** :- அச்சு ஊடக வெளியீடுகள் தொடர்பில் செய்திப் பத்திரிகைகள், மற்றும் அச்சு ஊடக பிரசுரங்கள், அவற்றின் உள்ளடக்கத்திற்கான விளக்கத்துடன் செய்திப் பத்திரிகை ஆக்கம் தொடர்பான நுட்பங்களின் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 8.2 பல்வேறு அச்சு ஊடகங்களுடன் தொடர்பான உள்ளடக்கங் களையும் அவற்றின் பல்வகைமைகளையும் தொடர்புபடுத்தி இனங்காண்பார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. அச்சு ஊடகங்களின் பல்வேறு இயல்புகளை இனங்கண்டு முன்வைப்பார்.
2. பல்வேறு அச்சு ஊடக பயன்பாட்டின் பயனுறுதிகளை தனித்தனியாக மதிப்பீடு செய்வார்.
3. அச்சு ஊடகம் என்ற வகையில் புத்தகங்களின் உள்ளடக்கங்களின் விசேட இயல்புகளை விளக்குவார்.
4. அச்சு ஊடகம் என்ற வகையில் செய்திப் பத்திரிகைகளின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.
5. அச்சு ஊடகம் என்ற வகையில் சஞ்சிகைகளின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.
6. அச்சு ஊடகம் என்ற வகையில் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றின் விசேட தன்மைகளை இனங்காட்டுவார்.
7. ஆக்கபூர்வமான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்துக் காட்சிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்** :-

- பல்வேறுபட்ட அச்சு ஊடக ஆவணங்கள், புத்தகங்கள், செய்தித்தாள்கள் போன்றவற்றின் பயன்பாடு தொடர்பாகப் பொருத்தமான கற்பித்தலுக்கான பிரவேசத்தினை ஒழுங்கு செய்தல்.
- மாணவர்களின் பங்குபற்றலுடன் முன்வைக்கப்படும் நடித்துக் காட்டல் அல்லது போலச் செய்தல், கற்றல் மாதிரிகளைக் காட்சிப்படுத்த முடியும்.
- புத்தக வெளியீட்டு நிகழ்வு ஒன்று அல்லது புத்தகக் கண்காட்சி தொடர்பான ஒலி - ஒளி காட்சி அல்லது படங்களைக் கொண்டு முற்காலத்திலிருந்து இன்று வரை ஆவணங்கள், அச்சுவெளியீடுகள் பெற்றுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகக் காட்சிப்படுத்தல்.
- மாணவர்களிற்குப் பாடசாலை நூலகம் தொடர்பாகத் தகவல் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல். இங்கு நூலகத்திலுள்ள பல்வேறு அச்சு ஊடகங்களை அறிந்து கொள்ளும் வகையில் மாணவர்களை வழிப்படுத்துதல்.
- பல்வேறு துறைகளில் எழுதப்பட்ட புத்தகங்களை மாணவர்கள் அறிந்து கொள்வதற்கு வழிப்படுத்துதல்.

- அவற்றின் பல்வேறு வகைகள் - உ.ம்: நூல்கள், செய்தித்தாள்கள், நாவல்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், சிறுவர் கதைகள், சிறுகதைகள்.
- மேலும் வெவ்வேறு அச்சு ஊடக வகைகளைக் கீழ்க்கூறப்படும் விசேட அம்சங்களின் வழியாக மேலதிக விளக்கம் பெற உதவுதல்.
    - நூல்கள் - புத்தகத்தைப் பாவனைக்குப் பெறுவது சுய வாசிப்பிற்காகவாகும்.
    - புத்தகத்தினுள் உள்ள அறிவை உள்வாங்கி பிரயோகிக்கும் தன்மை.
    - புத்தகம் ஒன்று மூன்று காரணங்களின் அடிப்படையில் எழுதப்படுகிறது.
        - கருத்துக்களை வெளியிடுதல்
        - தகவல் மற்றும் தரவுகள் வெளியிடுதல்
        - புத்தகங்களை முன்வைத்தல்.
        - நூலை எழுதுபவர் எழுத்தாளர்.
- எழுத்தாளர்கள் சிலர் இணைந்து நூல்கள் எழுதப்படுகின்ற சந்தர்ப்பங்களையும் சுட்டிக்காட்டுதல்.
- நூலை அச்சிடும் போது, அந்த வெளியீடு குறித்த தரநிர்ணயத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும் என்பதைக் காட்டுதல்.
- பல்வேறு வழிமுறைகளில் நூல்களை வகைப்படுத்தலுக்கான செயன்முறைகளில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- நூலின் முதற்பக்கத்தில் நூல் தொடர்பான முக்கிய தகவல்கள் பல வெளிக்காட்டப்படும் எனபதைக் காட்டுதல்.
- முதற் பக்கத்திலே பயன் மிக்க தகவல்களை விசேடமாக மாணவர்கள் அறிவதற்கு வழிப்படுத்துங்கள். (நூற் பெயர், நூல் வெளியீட்டாளர், வெளியிட்ட வருடம், எத்தனையாவது பதிப்பு, நூற்பதிப்பு இலக்கம் (ISBN) போன்ற தகவல்கள்) தரமான நூல் ஒன்றின் பண்புகளை அறிந்து கொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.

❖ **செய்திப் பத்திரிகைகள்:**

- பத்திரிகை என்பது கட்டப்படாத பக்கங்களைக் கொண்ட தகவல் திரட்டு ஆவணம் ஆகும்.
- பத்திரிகையின் உள்ளடக்கமானது நிகழ்காலத் தகவல்களைக் கொண்டது
- சுய வாசிப்பிற்கு மட்டும் உரியதன்று.
- பத்திரிகையின் பெறுமதி குறுகிய காலத்திற்கானது அல்லது விரைவாக அழிந்து செல்லக் கூடியது.
- செய்திப் பத்திரிகைகள் தரக்கூடிய தகவல்கள் விளக்கமாக அமையும்.
  (உ-ம்: மின்னியல் ஊடகங்களால் பெற்றுக் கொடுக்கக் கூடிய செய்திப் பத்திரிகையில் விளக்கமாகத் தரப்படுகிறது)
- செய்தித் தாள் தரப்பண்பு மட்டும் உடையதன்று. விசேட பகுதிகள், இணைப்புகள் என்பவற்றின் மூலம் மேலதிக கருத்துக்களை உருவாக்க முடியுமாயிருத்தல்.
- மக்கள் அபிப்பிராயங்களைத் தோற்றுவிப்பதற்கு, செய்திப்பத்திரிகைகளால் முடியும் என்பதைச் சுட்டிக்காட்டுதல். மேலும், செய்தித்தாள்களின் முதற் பக்கத்திலே செய்தித்தாள் தொடர்பாக முன்வைக்கப்பட்டும் விசேட குறிப்புக்களைக் கற்பதற்கு வழிப்படுத்துங்கள். (திகதி, வருடம், பதிப்பு வகைமை முதலியன).
- இலங்கையின் ஆரம்ப கால செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் தொடர்பான தகவல்களைத் தேடியறிய மேலும் வழிப்படுத்துதல்.

- **சஞ்சிகை:**
  - சஞ்சிகைகள் குறித்த கால இடைவெளிகளில் அல்லது தவணைகளில் வெளியிடப்படுபவை.
  - சஞ்சிகை ஒன்று கட்டப்பட்டுள்ள பக்கங்களைக் கொண்ட தகவல் திரட்டு ஆவணமாகும்.
  - சஞ்சிகை ஒன்று செய்தியை, செய்தி அல்லாதவையை உள்ளடக்கக் கூடும்.
  - சஞ்சிகை ஒன்றின் உள்ளடக்கத்தில் இறுதியான பொறுப்புக் கூறலை ஏற்க வேண்டியவர் பதிப்பாசிரியர் ஆவார்.
  - விடய அளவை இலக்காகக் கொண்டு வாசிப்பவர்களின் வகைமைக்கேற்ப சஞ்சிகைகளின் அடிப்படைச் சிந்தனைகளின் பேரில் சஞ்சிகைகளை வகைப்படுத்த முடியும்.
  - மேலும், சஞ்சிகை ஒன்றின் முதற்பக்கத்தில் சஞ்சிகை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள விசேட குறிப்புக்களைக் கற்பதற்கு வழிப்படுத்துங்கள். (திகதி, வகை, விடயதானம் முதலியன)

- **சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும்.**
  - வாசிப்பை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
  - இவை பற்றிய அடிப்படை அறிமுகம் வழங்குக.
  - பாடம் பற்றிய பல்வேறு தொழிற்பாடுகள் தொடர்பாக ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வதற்காக ஆக்கபூர்வமான சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்களைக் காட்சிப்படுத்த வழிப்படுத்துக.
  - அபிவிருத்தி சார்ந்த மேலதிக கற்கை விருத்திச் செயற்பாடுகளில் மாணவரை வழிப்படுத்துக.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- பதிப்பாசிரியர் அல்லது பதிப்பாசிரியர் குழு(Editorial board)
- எழுத்தாளர் (Writer)
- ஆக்கக்கர்த்தா (Author)
- உசாத்துணை நூற்பட்டியல் (Bibliography)
- புத்தகத்தை கட்டியிணைத்தல் (Book binding)
- வெளியீட்டாளர் (Publisher)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- புத்தகம் ஒன்றின் முதற்பக்கங்கள், தரமான நூல் ஒன்றின் உள்ளடக்கம், கலந்துரையாடலுக்கு முன்வைக்கப்படும் குறிப்புக்கள்.
- பல்வேறுபட்ட சஞ்சிகைகள், பல்வேறுபட்ட செய்தித்தாள்களின் தொகுதி, சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றின் மாதிரிகள்.
- நோக்கத்திற்குப் பொருத்தமான தகவல்களைத் தரக்கூடிய புத்தகங்கள், செய்தித் தாள், சஞ்சிகை மாதிரிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பல்வேறுபட்ட அச்சு ஊடக வடிவங்களை இனங்காண்பார்.
- பல்வேறுபட்ட அச்சு ஊடக உள்ளடக்க விடயங்களை விளக்குவார்.
- தரமான உயர் அச்சு ஊடக வெளியீடு ஒன்றை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் நியமங்களை வெளிப்படுத்துவார்.
- பல்வேறு அச்சு ஊடகங்களை வகைப்படுத்தி அறிவார்.
- அச்சு ஊடக ஆவண மாதிரிகளைத் தயாரிப்பதில் அடிப்படைத்திறன்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 8.0** :- அச்சு ஊடக வெளியீடுகள் தொடர்பில் செய்திப் பத்திரிகைகள், மற்றும் அச்சு ஊடக பிரசுரங்கள், அவற்றின் உள்ளடக்கத்திற்கான விளக்கத்துடன் செய்திப் பத்திரிகை ஆக்கம் தொடர்பான நுட்பங்களின் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 8.3 இலங்கையில் செய்தித்தாள்களின் வடிவமைப்பு, உள்ளடக்கம் தொடர்பான விசேட இயல்புகள் பற்றிய விளக்கங்களுடன் செய்தித்தாள் தயாரிப்பில் மாணவர் ஈடுபடுவார்.

**பாடவேளைகள்** :- 07

**கற்றற்பேறுகள்** :-

1. ஊடகம் என்ற வகையில் செய்தித்தாளின் முக்கியத்துவத்தினை இனங்காட்டுவார்.
2. பல்வேறு நியதிகளிற்கு அமைய செய்தித்தாள்களை வகைப்படுத்துவார்.
3. செய்தித்தாள்களின் உள்ளடக்கத்தினை பகுப்பாய்வு செய்வார்
4. செய்தித்தாள் ஊடகத்தின் ஆக்கபூர்வமான வடிவ அமைப்புக்களை இனங்காண்பார்.
5. இலத்திரனியல் செய்தித்தாள் பயன்பாட்டின் பல்வேறு வடிவங்களையும் இயல்புகளையும் விளக்குவார்.
6. செய்தித்தாள் உள்ளடக்கத்தினைக் கவனத்திற்கொண்டு செய்தித்தாள் வடிவமைப்பைப் பிரயோகத்திறனுடன் மேற்கொள்வார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- செய்தித்தாள்கள் அல்லது செய்தித்தாள் ஒன்றின் கவரச்சித் தன்மை, ஆர்வம் தூண்டும் படங்கள், தலைப்புக்கள், கட்டுரைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தி அவை தொடர்பாகக் கலந்துரையாடிப் பாடப்பிரவேசம் மேற்கொள்ள முடியும்.
- பாடத்தை ஆரம்பிப்பதற்குச் சில வாரங்களிற்கு முன்பிருந்து பல்வேறுபட்ட செய்தித்தாள்களைச் சேகரிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல்.
- அவற்றை வாசிப்பதற்கும், ஆராய்வதற்கும் மாணவர்களை நெறிப்படுத்துதல்.
- ஊடகம் என்ற வகையில் செய்தித்தாள் ஊடகத்தின் பயன்பாட்டுத்தேவை, ஊடகத்தின் முக்கியத்துவம், வரையறைகள் தொடர்பாக மாணவர்களுடன் விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டு, தேவையான அடிப்படை விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள மாணவர்களை வழிப்படுத்துதல்.
- செய்தித்தாள் வகைப்படுத்தலில் மாணவர்களை ஈடுபடுத்தல்.
- இலத்திரனியல் ஊடகச் செய்தித்தாள் தொடர்பான அடிப்படை நியதிகளை இனங்காட்டுங்கள்.
- இலத்திரனியல் ஊடகச் செய்தித்தாள் தொடர்பான விசேட நியதிகளை இனங்காட்டுங்கள்.

- இலத்திரனியல் ஊடகச் செய்தித்தாள்களின் குறிப்புக்கள், விபரங்கள் தொடர்பாக மிகவும் ஆழமான அறிவைப்பெறுவதற்குரிய வழிவகைகளைச் செய்தல்.
- செய்திப்பத்திரிகைகளிற்கும் இலத்திரனியல் ஊடக வழி செய்திப்பத்திரிகைகளிற்கும் இடையிலான தொடர்புகளைப் பற்றி இனங்காட்டுதல்.
- பல்வேறு இடைவினை வேறுபாடுகள் காணப்படுவதனையும் இனங்காட்டுதல். உதாரணம்: செய்திகளை வாசித்து தனது கருத்துக்களைக் குறிப்பிடுவதற்கான இயலுமை, இலத்திரனியல் ஊடகவழி செய்திப்பத்திரிகைகளில் காணப்படுதல் மூலம் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான இயலுமையை அறியச் செய்தல்.
- சமூக வலைத்தளங்களின் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான இயலுமையை அறியச் செய்தல்.
- கட்புல செவிப்புல வசதிகளுடன் கூடியதாக அவை அமைந்துள்ளமையை இனங்காட்டுதல்.
- செய்திப்பத்திரிகை, அச்சு ஊடகமாக மட்டும் இருக்கின்ற போதிலும் இலத்திரனியல் செய்திப்பத்திரிகை ஊடாக கட்புல செவிப்புல வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
- பொதுவில் செய்தித்தாள்களை இற்றைப்படுத்தல், மேலும் செய்தித்தாள்களை வெளியிடும் நிறுவனம் சார் நோக்கங்களை அறிய வழிப்படுத்துதல்.

  உதாரணம் : நிறுவனம் என்ற வகையில் வாசகர்களைத் தக்கவைத்திருத்தல், விமர்சனங்கள், ஈடுபாடுகளை சாத்தியமாக்குதலும், மிகவும் பரந்துபட்ட தகவல் வழங்குவதை செயற்படுத்தக் கூடியதாயிருத்தல்.
- செய்தித்தாள் ஒன்றின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ள வாய்ப்பளித்து பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனங்கொள்ளச் செய்தல்.
  - செய்திகளுக்கும் படங்களிற்கிடையிலுமான தொடர்புகள்.
  - முதற்பக்கத்தில் படங்களைப் பிரசுரித்தல்.
  - கறுப்பு வெள்ளைப் படங்களின் பாவனை, வர்ணப்படங்களின் தாக்கங்கள், பக்கவடிமைப்பின் (Layout) தேவை.
  - எழுத்து வடிவங்கள், வெண்மை இடப் பாவனை (Using white Space).
  - படங்களின் ஆக்கத்திறனும், நவீனத்துவமும்.
- செய்தித்தாள்களின் பல்வேறு ஆக்க வடிவமைப்புத் தொடர்பான அடிப்படை விடயங்களை இனங்காணுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல்.

  உதாரணம்: செய்திகள், ஆசிரியர் தலைப்பு, விசேட அம்சங்கள்.
- பாடசாலையில் சுவரொட்டிகள் அல்லது சுவர்ப்பத்திரிகைகள் வழியாக செய்தித்தாள் வடிவமைப்பையும் தயாரிப்பையும் பரீட்சித்துப் பார்க்க மாணவர்களை வழிப்படுத்துதல்.

### முக்கியமான பதங்கள் (Key words) :

- கட்டுரைகள் (Article)
- இலத்திரனியல் செய்தித்தாள் (E –News paper)
- வெண்மை இடப்பாவனை (White space)
- பக்கவடிவமைப்பு (Layout)
- கருத்துக்கள் (Expression of Comments)
- கருத்துப் பரிமாற்றம் (Sharing Information)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- செய்தித்தாள் ஒன்றின் பல்வேறு உள்ளடக்கங்கள், பிரதான விடயங்கள் தொடர்பான மாதிரிகள், சுவர்ப்பத்திரிகைகள், செய்திததாள் ஆக்கத்திற்காக தேவைப்படும் உள்ளீடுகள்.
- தலைப்பிற்குப் பொருத்தமான செய்தித்தாள்கள், உள்ளடக்கங்கள்.
- இணையம் வழியான இலத்திரனியல் செய்தித்தாள்களை வாசிக்கும் சந்தர்ப்பங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- செய்தித்தாள்களை வகையீடு செய்து முன்வைக்கும் திறன்களை மதிப்பீடு செய்வார்.
- செய்தித்தாள் உள்ளடக்க விடயங்களைப் பகுப்பாய்வு செய்வார்.
- செய்தித்தாள் ஊடக ஆக்கபூர்வமான வடிவமைப்பை இனங்காட்டுவார்.
- இலத்திரனியல் பத்திரிகைப் பாவனையின் தேவையை உறுதிப்படுத்துவார்.
- இலத்திரனியல் செய்தித்தாள் பாவனைக்கான திறன்களை வெளிப்படுத்துவார்.
- செய்தித்தாள் உருவாக்கத்தின் விசேட திறன்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 9.0** :- வானொலி ஊடகத்தின் இயல்பு மற்றும் வளர்ச்சி பற்றிய அறிவுடன் வானொலியை விமர்சன ரீதியாக அணுகுவதற்கும் வானொலி நுட்பமுறைகளை அறிவதற்குமான ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 9.1 வானொலி ஊடகத்தின் வளர்ச்சி மற்றும் இயல்பு பற்றிய தகவல்களை ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. வானொலி தோற்றம் பெற்ற வரலாற்றையும் வளர்ச்சிச் செயன்முறை பற்றிய கருத்துக்களையும் கண்டறிவார்.
2. இலங்கையில் வானொலி ஆரம்பிக்கப்பட்ட விதத்தை விபரிப்பார்.
3. ஆரம்ப காலம் முதல் தற்காலம் வரை வானொலி ஊடகம் இலங்கையில் பெற்றுள்ள செல்வாக்கை/ பிரபல்யத்தை மதிப்பிடுவார்.
4. வானொலி ஊடகத்தின் தனித்துவ இயல்புகளை விபரிப்பார்.
5. வானொலி ஊடகத்தின் புதியபோக்குகள் பற்றி அறிந்திருப்பார்/ விமர்சிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்** :-

- உலகில் வானொலி தோற்றம் பெற்ற விதம், வானொலியின் தோற்றத்திற்குப் பின்புலமாகக் காணப்பட்ட காரணிகள் பற்றிய தகவல்களை மாணவர்கள் கற்கும்படி பணிக்குக.
- இலங்கையில் வானொலி நிலையம் நிறுவப்பட்ட விதம் பற்றிய தகவல்களை மாணவர்கள் தேடியறியும்படி கூறுக.
  - கம்பிகள் ஊடாகத் தகவல் அனுப்புதல்
  - கம்பிகள் இல்லாமல் தகவல் அனுப்புதல் (Wireless)
  - சம நேரத்தில் தகவல் அனுப்புதல்
- மேற்குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்காக ஒப்படை முறையினைப் பயன்படுத்துவார். மேலும்,
  - வானொலி நிலையம் நிறுவப்பட்டமை
  - ஆரம்ப கால வானொலி நிகழ்ச்சிகள்
  - இலங்கையில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரபல்யமும் செல்வாக்கும்
  - இலங்கையில் பிரதேச வானொலி நிலையங்கள் உருவான விதம்
  - தற்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ள தனியார் வானொலி சேவைகள் பற்றிய தகவல்களை மாணவர் ஆய்வு செய்யும்படி பணிக்குக.

  அதே போல் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல், புகைப்படக் கண்காட்சி, புத்தகங்கள் உருவாக்குதல் என்பனவும் நிகழ்த்த முடியும்.
- வானொலி ஊடகத்தின் இயல்புகள், பிரபல்யம் மற்றும் எல்லைகள் என்பவற்றை இனங்கண்டு கொள்வதற்காக மாணவரைப் பிரயோகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.

இங்கு மேற்குறிப்பிட்ட விடயங்கள் வெளிப்படுத்தும் வகையில் பொருத்தமான நடித்தற் செயற்பாடுகளை (Role play) மாணவர் மேற்கொள்ளும்படி செய்க.

- வானொலி ஊடகத்தின் புதிய போக்குகள் பற்றி ஆராய்ந்திட மாணவரை நெறிப்படுத்துக.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- வானொலி (Radio)
- தொழில்சார் தகைமையற்ற வானொலிப் பயன்பாட்டாளர் குழுமம் (Amateur Radio club)
- பிரதேச வானொலி (Regional Radio)
- இணைய வானொலி (Web Radio)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- இலங்கையில் வானொலி தொடர்பான புத்தகங்கள், படங்கள், வரலாற்றுக் குறிப்புக்கள்
- வெவ்வேறு வானொலி அலைவரிசைகள் பற்றிய தகவல்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- உலகில் வானொலி தோற்றம் பெற்ற விதத்தைப் பகுதி பகுதியாக விபரிப்பார்.
- இலங்கையில் வானொலி ஊடகம் பெற்றுள்ள செல்வாக்குத் தொடர்பில் கலந்துரையாடுவார்.
- இலங்கையில் இயங்கும் வெவ்வேறு வானொலி அலைவரிசைகளை இனங்காண்வார்.
- செவிப்புல ஊடகத்தின் இலத்திரனியல் பண்புகள் பற்றிய விளக்கத்தை வெளிக்காட்டுவார்.
- வானொலி ஊடகத்தின் புதிய போக்குகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 9.0** :- வானொலி ஊடகத்தின் இயல்பு மற்றும் வளர்ச்சி பற்றிய அறிவுடன் வானொலியை விமர்சன ரீதியாக அணுகுவதற்கும் வானொலி நுட்பமுறைகளை அறிவதற்குமான ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 9.2 வானொலி ஊடகத்தின் உள்ளடக்கம் மற்றும் படைப்பாக்க ரீதியிலான அம்சங்கள், வேறுபாடுகளை இனங்காண்பார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. வானொலி ஊடக நிகழ்ச்சிகளின் வகைகளைப் பெயரிடுவார்.
2. வானொலி ஊடக நிகழ்ச்சி வடிவங்களின் உள்ளடக்கத்தை விபரிப்பார்.
3. வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பிற்கு அவசியமான நுட்பங்களை விளக்குவார்.
4. வெவ்வேறு நிகழ்ச்சி வகைகளின் தரத்தை உயர்த்துவதற்கான நுட்பங்ளைப் பிரயோகித்துப் பார்ப்பார்.
5. வானொலி நிகழ்ச்சிகளின் வகைகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை மட்டத்தில் நிகழ்ச்சிகள் தயாரிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- பொதுவாகச் செவிமடுக்கப்படும் வானொலி நிகழ்ச்சிகள் சிலவற்றை மாணவர்கள் வகுப்பறையில் செவிமடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்க.
  - செய்தி, சஞ்சிகை நிகழ்ச்சிகள், வானொலி நாடகம் …
- மாணவர்கள் செவிமடுத்த வெவ்வேறு நிகழ்ச்சிகளுக்கிடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு ஒவ்வொரு நிகழ்ச்சியினதும் இயல்புகளை இனங்காண மாணவரை நெறிப்படுத்துக.

  (வானொலி நிகழ்ச்சி வடிவங்கள் பற்றிய விளக்கத்திற்கு பாட நூலைப் பயன்படுத்துக.)
- மாணவர்கள் வானொலி நிகழ்ச்சிகளின் (உள்ளடக்கம், இயல்பு, வேறுபாடுகளை) மேலும் அறிந்து கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குக.
- சகல ஊடக நிறுவனங்களும் தத்தமக்குரிய குறிக்கோள்களுடன் செயற்படும் என்பதை நினைவுபடுத்துக.
  - பொதுசன சேவை
  - இலாபம் ஈட்டல்
  - குறித்த இலக்கை அடைதல் (உ-ம்: சமயம் சார் பணிகள் …)
- அதனடிப்படையில் ஒவ்வொரு அலைவரிசையினாலும் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் ஒரே மாதிரியானவையாகவும் வேறுபட்டவையாகவும் காணப்படும் என்பது தொடர்பில் கலந்துரையாடுக.

  உ-ம் : விளையாட்டு அலைவரிசை – விளையாட்டு செய்திகள் வெளியிடுதல்
- விசாலமான பெறுநர் கூட்டத்தை மையப்படுத்தி இயங்கும் ஓர் வானொலி அலைவரிசையானது ஒரே விதமான நிகழ்ச்சிகள் அல்லது வெவ்வேறு விதமான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு ஆர்வம் காட்டும். இவ்வாறாக ஊடகங்கள் வெவ்வேறு

குறிக்கோள்களுடன் இயங்குவதோடு, அவற்றை நாடும் பெறுநர்களும் வெவ்வேறு வகைப்படுவர் என்பதை எடுத்துரைக்குக.

- ஒவ்வொரு நிகழ்ச்சியினதும் தரத்தை உயர்த்துவதற்கான உபாயங்களை மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:

  - அதிகமானோரின் கவனத்தை ஈர்க்கும் தலைப்பை அல்லது உள்ளடக்கத்தைத் தெரிவு செய்தல்.
  - அதிகமானோரால் வரவேற்கப்படும் வளங்களை (Resource persons) உபயோகித்தல்
  - அறிவிப்பாளன் குறைவாகவும் கலந்துரையாடலில் ஈடுபடும் நபர்கள் அதிகமாகவும் உரையாடுவதோடு அவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.
  - நிகழ்ச்சியின் இடையே தொலைபேசி உரையாடல்களில் ஈடுபடல்
  - மேற்குறிப்பிட்டவாறு நிகழ்ச்சி வகைகள் ஒவ்வொன்று பற்றியும் கலந்துரையாடுக.

- மாணவர்கள் தம் இல்லத்திலே குறிப்பிட்ட ஓர் அலைவரிசையைத் தெரிவு செய்து, அதில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளைச் செவிமடுத்து, நிகழ்ச்சிகளின் வகைகளை இனங்கண்டு அவற்றைக் குறிப்பெடுத்துக் கொள்ளுமாறு பணிக்குக.
- மாணவரால் இனங்காணப்பட்ட நிகழ்ச்சி வடிவங்களின் வேறுபாடுகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.
- அதேபோல் வெவ்வேறு அலைவரிசைகள் அவற்றில் ஒலிபரப்பாகும் வெவ்வேறு நிகழ்ச்சிகள் பற்றி அறிந்து கொள்ள இவ்வாறான ஒத்த செயற்பாடுகளை மேற்கொள்க.
- வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்கு தேவையான ஆவணங்களைத் தயாரிப்பதில் மாணவரை ஈடுபடுத்துக. ஓவ்வொரு நிகழ்ச்சிக்கும் உசிதமான நுட்பமுறைகள் பற்றிக் கருத்திற் கொள்க.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- வானொலி நிகழ்ச்சிகள் - Radio Programmes
- நிகழ்ச்சிப் பிரதி - Programme Script
- வானொலி அலைவரிசை - Radio Channel
- ஒலிபரப்பு - Broadcasting/ Transmission

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- வானொலி நிகழ்ச்சிகளின் மாதிரிகள் (Model of radio Script)
- நிகழ்ச்சிப் பிரதிகளின் மாதிரி (script)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- வெவ்வேறு வானொலி ஊடக நிகழ்ச்சிகளை வகைப்படுத்துவார்.
- தேசிய சேவையின் நிகழ்ச்சிகளை மற்றைய வானொலி அலைவரிசைகளுடன் ஒப்பிட்டு இனங்காண்பார்
- வானொலி நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்துவதற்கான உபாயங்களை இனங்காட்டுவார்.
- வானொலி நிகழ்ச்சி தயாரிக்கும் ஆற்றலை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி 9.0** :- வானொலி ஊடகத்தின் இயல்பு மற்றும் வளர்ச்சி பற்றிய அறிவுடன் வானொலியை விமர்சன ரீதியாக அணுகுவதற்கும் வானொலி நுட்பமுறைகளை அறிவதற்குமான ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 9.3 வானொலியை விமர்சனரீதியாகச் செவிமடுத்து ஆக்கபூர்வமானதும் தரமானதுமான வானொலி நுட்பங்களை வெளிக்காட்டும் ஆற்றலைப் பெறுவார்.

**பாடவேளைகள்** :- 05

**கற்றற்பேறுகள்** :-

1. வெவ்வேறு வானொலி அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும் பிரபலமான வெற்றிகரமான நிகழ்ச்சிகளை மாணவன்/ மாணவி செவிமடுப்பார்.
2. வானொலி அலைவரிசைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனரீதியான கருத்துக்களைத் தெரிவிப்பார்.
3. வினைத்திறன்மிக்க வானொலி நிகழ்சிகளை இனங்காண்பது பற்றி மற்றவர்களுக்கு அறிவூட்டுவார்.
4. வானொலி நிகழ்ச்சிகளின் வெற்றிக்குக் காரணமாகும் படைப்பாக்க ரீதியான பண்புகளை இனங்காட்டுவார்.
5. பொழுதுபோக்கிற்காக வானொலி ஊடகத்தை வினைத்திறன் மிக்கவாறு பயன்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்** :-

- வெவ்வேறு வானொலி அலைவரிசைகளின் நிகழ்ச்சிகள் சிலவற்றை மாணவர்கள் செவிமடுப்பதற்குரிய சந்தர்ப்பம் வழங்குக.
- வெற்றிகரமானதோர் வானொலி நிகழ்ச்சியில் காணப்பட வேண்டிய பண்புகள் தொடர்பில் மாணவருடன் கலந்துரையாடுக.

  உ-ம்:

  - சிறந்த முறையில் மொழியைப் பயன்படுத்தல்
  - தேசிய பண்பாட்டைப் பாதுகாத்தல்
  - யாதேனும் ஒரு நபரின் அல்லது நிறுவனத்தின் நன்மதிப்புக்குப் பங்கம் ஏற்படாதவாறு நடந்து கொள்ளல்
  - பெறுநரை ஏமாற்றத்திற்குள்ளாக்காமை
  - நேரத்தை வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்தல்
  - யாதேனும் ஒரு நபரின் அந்தரங்க விடயங்களை அல்லது தனிப்பட்ட விடயங்களை (Privacy) ஊடகத்தினூடாக வெளியிடாதிருத்தல்
- மாணவர்கள் தெரிவு செய்த வானொலி நிகழ்ச்சிகளை அவர்கள் தடையின்றிச் செவிமடுப்பதற்குரிய வழிவகை செய்தல்.

- நிகழ்ச்சிகளின் பலம் மற்றும் பலவீனம் பற்றிய ஒப்பீடுகளை மேற்கொள்ளும் வண்ணம் வானொலி நிகழ்ச்சிகளை மாணவர்கள் செவிமடுக்கும்படி பணிக்குக.

  இதற்காக, கீழ்க்கண்டவாறு ஓர் அட்டவணையைத் தயாரிக்கும்படி கூறுக.

  அலைவரிசை : ........................................................

  செவிமடுத்த நேரம்: .................... இருந்து ................. வரை

| நிகழ்ச்சி | பலம் | பலவீனம் |
|---|---|---|
| | | |

- வானொலி நிகழ்ச்சிகளை செவிமடுக்கும்போது கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பான மாணவரது கவனத்தை ஈர்க்குக.
  - ஊடகங்களினால் வெளியிடப்படும் தகவல்கள் எவ்வளவு துல்லியமானவை?
  - ஊடகங்களினால் வெளியிடப்படும் அனைத்துத் தகவல்களும் உண்மையானவையா?
  - ஊடக வெளியீடுகளுக்குப் பின்னணியாக உள்ள யதார்த்தம் வேறுபட்டதா?
  - ஊடக நிறுவனங்களுக்கிடையே ஒன்றையொன்று முந்திச் செல்லும் போட்டி நிலைமை காணப்படுகிறதா?
- மாணவர்கள் செவிமடுத்த நிகழ்ச்சிகளிலே மானுடத் தொடர்பும் விழுமியங்களும் (காதல், கருணை, கௌரவம், நம்பிக்கை) உயர் மட்டத்திலே வெளிப்படுத்தப்படும் விதத்தை மாணவர்கள் கற்றறியும்படி கூறுக.
- மாணவர்கள் மிகவும் எளிமையான நிகழ்ச்சியிலிருந்து மிகவும் சிக்கலான நிகழ்ச்சி வரையாக அனைத்து நிகழ்ச்சிகளினதும் உள்ளடக்கங்களை ஆய்வு செய்யும்படி பணிக்குக.

  இங்கு,
  - நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் வசனங்கள்
  - பண்பாடு விபரிக்கப்படும் விதம்

  முதலான தகவல்கள் மற்றும் மூலாதாரங்கள் பற்றிய கற்கைக்கு மாணவரை நெறிப்படுத்துக.
- மாணவர்கள் ஏற்கனவே செவிமடுத்த நிகழ்ச்சிகள் தொடர்பாக அறிவுபூர்வமான கலந்துரையாடல்கள் விவாதங்கள் பட்டிமன்றங்கள் என்பவற்றை நிகழ்த்துக.
- வினைத்திறன்மிக்க வானொலி நிகழ்ச்சிகளை மாணவர்கள் இனங்காண அவர்களை நெறிப்படுத்துக.
- வானொலி ஊடகத்தால் ஒலிபரப்பப்படும் சிறந்த நிகழ்ச்சிகள் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காகச் சுவரொட்டிகள் அல்லது சுவர்ப் பத்திரிகைகள் தயாரிக்கும்படி மாணவரை நெறிப்படுத்துக.
- இதன்மூலமாக சிறந்த வானொலி நிகழ்ச்சிகள் அவை ஒலிபரப்பப்படும் நேரம் மற்றும் அவற்றின் உள்ளடக்கம் பற்றி மற்றவர்களுக்கு அறிவூட்ட முடியும்.

- இச் சுவரொட்டி அல்லது சுவர்ப் பத்திரிகையினூடாக வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனக் கடிதங்கள், படைப்பாக்க ரீதியான ஆவணங்கள், வானொலி தொடர்பான தகவல்கள் என்பவற்றைப் பிரசுரிக்கலாம்.
- வானொலி ஊடகத்தின் இலத்திரனியல் செயற்பாட்டை மாணவர்கள் அறிவதற்குரிய வழிவகை செய்க.
- இணையத்தை மையப்படுத்திய வானொலி சேவைகள் பற்றிய அறிமுகத்தினை மாணவருக்கு வழங்குக. இதன்போது மாணவர்களது திறமை மற்றும் பாடசாலையில் உள்ள வளங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் இணைய வானொலியைப் பாடசாலையில் உருவாக்குக.
- மேற்கூறப்பட்ட ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்க மற்றும் ஒலிபரப்ப மாணவரை நெறிப்படுத்துக.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- நிகழ்ச்சிகளின் தரம் - Quality of the Programme
- இலத்திரனியல் செய்தித்தாள் - Electronic Newspaper
- இணைய வானொலி - Web Radio
- உயர்தரத்திலான நிகழ்ச்சிகள் - Programmes with high standard

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- வெவ்வேறு வானொலி அலைவரிசைகளின் பிரபலமான அல்லது வெற்றிகரமான நிகழ்ச்சிகளின் தொகுப்பு
- வானொலி நிகழச்சிகள் பற்றிய விமர்சனக் கடிதங்கள்
- வானொலி ஊடகத்தின் இலத்திரனியல் செயற்பாடு
- புகைப்படங்கள், வீடியோ காட்சிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- வெவ்வேறு வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சன ரீதியான கருத்துக்கள் வெளியிடும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- வினைத்திறன்மிக்க வானொலி நிகழ்ச்சிகளை மதிப்பிடும் நியமங்களை (Criteria) விளக்குவார்.
- வினைத்திறன்மிக்க வானொலி நிகழ்ச்சிகளை செவிமடுப்பார்.
- வானொலி ஊடகத்தின் இலத்திரனியல் செயற்பாட்டை ஆய்வு செய்வார்.
- வானொலி ஊடகம் சார் ஆற்றலை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 10.0** :- தொலைக்காட்சி ஊடக ஒளிப்பரப்பின் இயல்பை விளங்கிக் கொள்வதுடன், விமர்சன கண்ணோட்டத்துடன் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசிக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 10.1 தொலைக்காட்சி ஊடகப்பின்னணி தொடர்பான விளக்கத்துடன் தொலைக்காட்சியை விமர்சன ரீதியாகப் பயன்படுத்தும் திறன்களை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்புகளை இனங்காண்பார்.
2. தொலைக்காட்சி தோன்றிய வரலாற்று அடிப்படையில் அதனை விளக்குவார்.
3. இலங்கையில் தொலைக்காட்சி ஊடகம் ஆரம்பிக்கப்பட்ட முறை தொடர்பாக ஆய்வில் ஈடுபடுவார்.
4. இலங்கையின் தொலைக்காட்சி ஊடகம் கொண்டுள்ள பரிணாம வளர்ச்சி தொடர்பாகப் பெருமிதம் கொள்வார்.
5. தொலைக்காட்சி ஊடகத்தின் புதிய வளர்ச்சி அனுபவங்களை உள்வாங்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- சித்திரங்கள் தோன்றுவதற்கான அடிப்படைத்தேடல்கள் காட்டப்பட்டுள்ள படங்கள் அல்லது சலனப்படங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான தத்துவங்களைப் பரிசீலிக்கும் பொருத்தமான கற்றல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்தல் அல்லது அதனுடன் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- கற்றல் பிரவேசத்திற்கான தலைப்புடன் தொடர்புற்றதாக ஆசிரியர் மாணவர்களிற்கு இடையே சுமூகமான கலந்துரையாடலைக் கட்டியெழுப்புதல்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகத் தகவல்களைக் கண்டறிவதில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
    - தொலைக்காட்சி ஊடகத்தின் விரிவாக்கத்திற்குக் காரணமாக அமைந்த அடிப்படைகளைத் தேடியறிதல்.
    - குறித்த தேடல்களுடன் தொடர்புடைய தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய விளக்கம் பெறுதல்.
    - தொலைக்காட்சி ஒலி - ஒளி பரப்பின் தோற்றம், விரிவாக்கம் தொடர்பான விளக்கம் தருதல்.
    - இலங்கையில் தொலைக்காட்சி ஊடக ஒளி-ஒலி பரப்பின் ஆரம்பம், அதன் வளர்ச்சிப் போக்குகள்.
- தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்பு, ஊடகத்தின் பிரபல்யத்திற்கான சாதக அம்சங்கள், ஊடகத்தின் இயல்புகளை இனங்காண்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல்.
- தொலைக்காட்சி ஊடகத்தை, ஏனைய ஊடகங்கள் என்பவற்றோடு தொடர்புபடுத்தி கற்றலுக்காக வழிப்படுத்துதல்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- இலக்கத் தொலைக்காட்சி - Digital Television
- வலைத் தொலைக்காட்சி - Web Television
- செய்மதித் தொலைக்காட்சி - Satellite Television
- வடத் தொலைக்காட்சி - Cable Television

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தொலைக்காட்சியின் தோற்றத்துக்குப் பின்னணியாக அமைந்த கண்டுபிடிப்புக்கள் தொடர்பான தகவல்களடங்கிய படங்கள்
- இலங்கையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தோற்றம் பெற்றமை சார்ந்த தகவல் அடங்கிய ஆவணங்கள், படங்கள்
- வெவ்வேறு தொலைக்காட்சிச் சேவைகளை (Channels) இனங்காண்பதற்குரிய குறியீடுகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தொலைக்காட்சி ஊடகத்தின் ஆரம்பம் மற்றும் ஒலி-ஒளி பரப்பு தொடர்பான தகவல்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்.
- இலங்கையில் தொலைக்காட்சி ஊடகத்தின் தோற்றம் தொடர்பான விளக்கத்தைப் பெறுவார்.
- தொலைக்காட்சி ஊடகத்தின் இயல்புகள் தொடர்பாக பெற்றுள்ள தேர்ச்சியை இனங்காண்பார்.
- தொலைக்காட்சி ஊடகத்தின் பண்புகளை இனங்காண்பார்.
- தொலைக்காட்சி ஊடகத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடும் திறனைப் பெறுவார்.

**தேர்ச்சி 10.0** :- தொலைக்காட்சி ஊடக ஒளிப்பரப்பின் இயல்பை விளங்கிக் கொள்வதுடன், விமர்சன கண்ணோட்டத்துடன் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசிக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 10.2 தொலைக்காட்சி ஊடகத்தின் உள்ளடக்கம் மற்றும் சட்டக மாதிரியான பல்வகைமை என்பவற்றை தொடர்புபடுத்தலின் மூலம் இனங்காண்பார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வகைப்படுத்திக் கூறுவார்.
2. தொலைக்காட்சி நிகழச்சிகளின் உள்ளடக்கத்தை விளக்குவார்.
3. பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒலி-ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்து கொள்வார்.
4. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தர மேம்பாட்டிற்கான உபாயங்களைச் சுட்டிக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- மாணவர்களை பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒலி-ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை வகைப்படுத்துவதில் ஈடுபடுத்துதல்.
- சில தினங்கள் தொலைக்காட்சி பார்வையிடுவதற்கு வாய்ப்பளித்த பின்னர், நிகழ்ச்சிகளின் வடிவங்களை இனங்காண்பதற்கு வழிப்படுத்துதல்.
- ஒவ்வொரு தொலைக்காட்சி நிகழ்ச்சியும் வெவ்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளின் ஊடாக வெவ்வேறு வடிவங்களில் இடம்பெறுவது தொடர்பில் மேலும் இனங்காண்பதற்கு மாணவரை ஈடுபடுத்துதல்.
- நிகழச்சிகளின் பெயர், ஒளி பரப்புக் காலம், நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் போன்ற அடிப்படைத் தகவல்களைச் சேகரிக்க ஈடுபடுத்துதல்.
- தொலைக்காட்சி ஊடக நிகழச்சிகளின் இயல்பு, உள்ளடக்கம் என்பவற்றை இனங்காண வாய்ப்பு வழங்குதல்.
    - தொலைக்காட்சி நாடகத் தொடர்.
    - பாடல்கள் சார்பான நிகழ்ச்சிகள்.
    - கலந்துரையாடல்.
    - விவாதம்.
    - சஞ்சிகை நிகழ்ச்சிகள்.
    - செய்திகள்.

  ஆகிய நிகழ்ச்சிகளின் வரையறைகள் தொடர்பாக அறியச் செய்தல்.

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- விவரண நிகழ்ச்சிகள் - Documentary Programmes
- சஞ்சிகை நிகழ்ச்சிகள் - Magazine Programmes
- நேரடி நிகழ்ச்சிகள் - Live Programmes

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வெவ்வேறு தொலைக்காட்சி சேவை நிகழ்ச்சி வகைகள் - மாதிரிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- வெவ்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சி வகைகளைப் பெயரிடுவார்.
- வெவ்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சி வகைகளின் பல்வகைமையை எடுத்துக் காட்டுவார்.
- வெவ்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை முன்வைக்கும் ஊடக நிறுவனங்களின் குறிக்கோள்களை முன்வைப்பார்.
- வெவ்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரமேம்பாட்டுக்காகக் கையாளப்படும் உத்திகளை எடுத்துக்காட்டுவார்.

**தேர்ச்சி 10.0** :- தொலைக்காட்சி ஊடக ஒளிப்பரப்பின் இயல்பை விளங்கிக் கொள்வதுடன், விமர்சன கண்ணோட்டத்துடன் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசிக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 10.3 பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஆக்கம் அதன் தரம் தொடர்பாக விமர்சன அடிப்படையில் மதிப்பிடும் திறன் பெறுவார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் தரம் தொடர்பாக விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைப்பார்.
2. பயனுள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடு வதற்காக ஏனையோரை ஈடுபடுத்துவார்.
3. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரத்தினை நிர்ணயம் செய்வதற்குத் தேவையான நியமங்களை இனங்காண்பார்.
4. தொலைக்காட்சி நிகழச்சிகளின் வெற்றிக்கு ஏதுவான ஆக்கரீதியான பண்புகளைச் சுட்டிக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- குறுங்கால தொலைக்காட்சி நிகழ்ச்சி (ஒன்றை பத்து நிமிடங்கள் கொண்ட பாடல் ஒன்றின் ஒரு பகுதி, தொலைக்காட்சி நாடகத் தொடர் ஒன்றின் ஒரு பகுதி) மாணவர் கண்டு இரசிப்பதற்கு வாய்ப்பளித்தல். பார்வையிடும் போதே தான் கண்டுணரும் நிறை குறைகளைக் குறிப்பெடுப்பதற்கு அறிவுறுத்தல். நிகழ்ச்சி நிறைவுறும் போது இந்நிகழ்ச்சி தொடர்பாகத் தாம் உணரக் கூடியவற்றைச் சுதந்திரமான கருத்துக்களாக முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஆசிரியர்களின் கருத்துக்களையும் சேர்த்துக் கொண்டு மாணவர்களால் தவறவிடப்பட்ட விசேட விடயங்களையும் கலந்துரையாடுதல்.
- மேலும் மாணவர்களில் அநேகமானோரால் பார்வையிடப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைத் தெரிவு செய்து, அந்நிகழ்ச்சியை வீட்டிலிருந்தவாறு பார்த்து விமர்சன அடிப்படையில் கருத்துக்களைக் குறிப்பெடுத்துச் சமர்ப்பிக்க வழிப்படுத்துதல்.
- ஏற்கனவே பார்த்து இரசித்த நிகழ்ச்சி தொடர்பாக விமர்சன ரீதியாகக் கருத்துக்களை முன்வைப்பதற்கு வாய்ப்பு வழங்குதல்.
- தெரிவு செய்து கொண்ட தரமான தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றைப் பார்வையிட மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குதல்.
- மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நிகழச்சிகள் தொடர்பாக, சாதக பாதக விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- முக்கிய பண்புகளைக் குறிப்பெடுத்து முன்வைப்பதற்கு வாய்ப்பளித்தல்.
- மாணவர்களால் பார்வையிடப்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்து முக்கியமான பண்புகளை பட்டியற்படுத்தி, விமர்சன அடிப்படையில் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி மேலும்

வெளிப்படும் விடயங்களையும் இணைத்துத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் நியதிகளை நிர்ணயம் செய்ய வழிப்படுத்துதல்.

- அவ்வாறே தொலைக்காட்சி வெற்றிக்குக் காரணமாக அமையும் பயனுறுதியுள்ள பண்புகளை இனங்காண மாணவர்களை வழிப்படுத்துதல்.
- மேலும் பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளின் மூலம் நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு, நிகழ்ச்சிகளின் பிரவேசத்திற்குரிய பண்புகளான தரம் சார்ந்த பண்புக் கூறுகள், அனுகூலங்கள், பிரதிகூலங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துதல். விமர்சன ரீதியான கருத்துக்களை வெளிப்படுத்தும் பண்புகள், நிபுணத்துவக் குழுக்களின் அனுசரணையுடன் விமர்சன ரீதியான கலந்துரையாடல், விரிவுரை, கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பங்கள், சுவர்ப்பத்திரிகைகளிற்கான ஆக்கங்கள் தயாரித்தலுக்கான சந்தர்ப்பங்கள் ஆகியவற்றை மாணவர்களிற்குப் பெற்றுத்தருதல்.
- தமது கருத்துக்களை முன்வைப்பதன் ஊடாக ஏனையவர்களும் அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்.
- தொலைக்காட்சியைப் பயனுறுதியுள்ள வகையில் பயன்படுத்துவதற்காக இனங்காணும் கற்றல் முறைமைகளை பிரயோகிப்பதற்கு வழிப்படுத்துவதால் மாணவர்களின் அறிவை மேம்படுத்தலாம். இதற்காக, காலைக் கூட்டம், சுவர்ப்பத்திரிகைகள் போன்ற முறைகளைக் கையாள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- விமர்சனம் - Criticism
- படைப்பாற்றல் - Creativity

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தலைப்பிற்குப் பொருத்தமான தொலைக்காட்சி நிகழச்சிகள்.
- படத்தொகுதி.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தொலைக்காட்சி மூலம் பயனுள்ள, தரமான, படைப்பாக்க நிகழ்ச்சிகளை முன்வைத்தலின் அவசியத்தை உறுதிப்படுத்துவார்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் பயனுள்ள தன்மையையம் தரத்தையும் தீர்மானிப்பதற்குப் பொருத்தமான நியமங்களை முன்வைப்பார்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வெற்றிக்குத்துணையாகும் ஆக்கியல்புகளை எடுத்துக்காட்டுவார்.
- தெரிவு செய்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் வெற்றி தொடர்பாக பகுத்தறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.
- பயனுள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தொடர்பாக ஏனையோருக்கு அறிவூட்டம் செய்தல் தொடர்பான செயல்ரீதியான திறன்களை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி 10.0** :- தொலைக்காட்சி ஊடக ஒளிப்பரப்பின் இயல்பை விளங்கிக் கொள்வதுடன், விமர்சன கண்னோட்டத்துடன் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசிக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 10.4 தொலைக்காட்சி ஊடகம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தினை விமர்சன அடிப்படையில் இனங்காண்பார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏற்படுத்தும் பல்வேறு தாக்கங்களை வகைப்படுத்துவார்.
2. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மாணவர்களிற்கு ஏற்படுத்தும் தாக்கங்களை உதாரணங்களுடன் இனங்காட்டுவார்.
3. தொலைக்காட்சி ஊடகம் பொது மக்களிற்கு ஏற்படுத்தும் தாக்கங்களை அறிந்து கொள்வார்.
4. தொலைக்காட்சி ஊடகம் நல்ல சமூக இயல்புகளை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- ஊடகம் என்ற வகையில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களின் முக்கியத்துவம் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- கட்புல செவிப்புல ஊடகம் என்ற வகையில் தொலைக்காட்சி ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் ஏற்படுத்தும் அல்லது ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களை அவதானிப்புக்களின் அடிப்படையில் வகைப்படுத்த மாணவர்களை வழிப்படுத்துதல்.

  உதாரணம்:
  1. சாதகமான தாக்கங்கள்.
  2. பாதகமான தாக்கங்கள்.
  3. பொது மக்கங்களிற்கு ஏற்படும் தாக்கங்கள்.
  4. சிறுவர்களிற்கு ஏற்படும் தாக்கங்கள்.
- மேற்படி வகைப்படுத்திய தாக்கங்களின் அடிப்படையில் வெவ்வேறு தொலைக்காட்சி நிகழச்சிகள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பில் காரண - காரியத் தொடர்புகளை உதாரணங்களுடன் வெளிப்படுத்த வழிப்படுத்தல்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் மூலம் பிள்ளைகளிற்கு அல்லது சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள், அவற்றிலிருந்து விடுவிப்பதற்கான தேவைகள், பாதிப்புக்களிலிருந்து விடுபடக் கூடிய முறைகள் தொடர்பாக ஏனையவர்களிற்கு அறிவூட்டுவதற்காகப் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல்.

  உதாரணம்: காலைக் கூட்டம்.
  வீதி நாடகங்கள்.

சுவர்ப்பத்திரிகைகளிற்கு ஆக்கங்கள் எழுதுதல்.

கருத்துக்களை முன்வைத்தல்.

- தொலைக்காட்சி மூலம் பெறுமதியான சமூக விழுமியங்களை ஏற்படுத்துவதற்கு ஆற்றக் கூடிய நடவடிக்கைகளை இனங்காண வழிப்படுத்துதல். கருத்துரைகள், ஊடகத்தில் கலந்துரையாடல் நிகழ்வில் பிரதிபலிப்பை முன்வைத்தல் போன்ற பொருத்தமான முறைகளைப் பிரயோகிக்க முடியும்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தொலைக்காட்சியினால் பிள்ளைகளுக்கு ஏற்படக் கூடிய தாக்கங்களுடன் தொடர்புடைய விளம்பரங்கள்.
- காட்டூன், கேலிச்சித்திரங்கள், நிகழ்வுகளின் காட்சிகள்.
- தொலைக்காட்சியில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- ஓர் ஊடகம் என்ற வகையில் தொலைக்காட்சி பெறுநர் மீது ஏற்படுத்தத்தக்க தாக்கத்தின் வலிமையைப் பகுத்தாய்வார்.
- தொலைக்காட்சி ஊடகத்தின் மூலம் பெறுநர் மீது ஏற்படுத்தத்தக்க தாக்கங்களை வெவ்வேறு விதமாக வகைப்படுத்துவார்.
- தொலைக்காட்சி ஊடகம் காரணமாகப் பிள்ளைமீது ஏற்படும் தாக்கங்களை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுவார்.
- தொலைக்காட்சியின் மூலம் சமூகத்தில் நல்ல வகையிலான தாக்கங்கள் ஏற்படுத்துவதற்காக அதன்பணி எவ்வாறானதாக இருத்தல் வேண்டும் எனப் பகுத்தாய்வார்.

**தேர்ச்சி 11.0** :- பல்வேறு படைப்பாற்றல் நுட்பங்களை இனங்காண்பதன் மூலம் படைப்பாற்றலுக்காகப் பிரயோகிக்கக் கூடிய நுட்பங்கள், மூலாதாரங்கள் போன்ற விளக்கத்துடன் படைப்பாக்கங்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 11.1 ஆக்கங்களின் மூலம் படைப்பாற்றல் பண்புகளின் அடிப்படை விளக்கங்களை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. படைப்பாக்க ரீதியான தொடர்பாடல், பொதுத் தொடர்பாடலிருந்து வேறுபடும் விதத்தை விளக்குவார்.
2. படைப்பாக்கரீதியான தொடர்பாடலின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுவார்.
3. பல்வேறு படைப்பாக்கங்களின் ஊடாக படைப்பாற்றலுக்கான பண்புகளை விளக்குவார்.
4. ஒரு அனுபவத்தின் அடிப்படையில் பல்வேறு மாதிரிப் படைப்புகள் உருவாக்கப்படும் முறைகளை உதாரணங்களுடன் முன்வைப்பார்.
5. படைப்பாற்றலின் மூலம் தொடர்பாடல் திறன்களை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- பல்வேறு படைப்பாற்றல் மூலமான தொடர்பாடல்களை உணர்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக அவற்றிலுள்ள படைப்பாற்றல் பண்புகள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பாடப்பிரவேசம் செய்தல். இதற்காக ஆக்கபூர்வமாக எழுதப்பட்ட வசனத்தொகுதி, கவிதை, நேரடித் தொடர்பாடலிற்காக எழுதப்பட்ட வாக்கியங்கள் என்பவற்றை வழங்கி ஆக்கப்பண்புகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதன் மூலம் பாடப்பிரவேசம் மேற்கொள்ள முடியும்.

  மேற்காட்டப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையில்,

- தொடர்பாடலை நேரடியாக மற்றும் ஆக்கபூர்வமாக மேற்கொள்ள முடியும் என்பதைத் தெளிவாக்குதல்.
- ஆக்கபூர்வமான தொடர்பாடலின் பெறுமதி தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.

  உதாரணம்: மனிதர்களின் இரசனை ஆற்றல் மேம்படுகின்றது; மானுட விழுமியங்கள் விருத்தியுறுகின்றன.

- செவிப்புல ஊடக வெளியீடுகளைத் தயாரிக்கும் விதிமுறைகளைக் கற்பதற்கு வழிப்படுத்துதல். இங்கு பாரம்பரிய செவிப்புல வெளியீடுகளாகக் கூக்குரலிடுதல், பறைஒலித்தல், ஊதுகுழல் ஓசை, காண்டாமணி ஓசை என்பவற்றின் ஒலிகளை இனங்காட்டுதல்.

- செவிப்புல ஊடகங்களாக பாடல், கவிதை என்பவற்றை இனங்காண்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துதல்.
- அம்மாவைப் பற்றிய ஓர் வசனத்தை எழுதும்படி மாணவர்க்கு கூறுக.
- மாணவர்கள் எழுதிய வசனங்களை சுவரொட்டியினூடாகக் காட்சிப்படுத்துக.
- ஆசிரியர் - எனது அம்மா பிறந்தது நான் பிறந்த திகதியிலேயே ஆகும்.

  (மேர்சிலின் ஜயக்கொடி வணபிதா)
- ஆசிரியர் எழுதிய வசனம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக. இங்கு சாதாரண வசனங்களுக்கும் படைப்பாக்க ரீதியான வசனங்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் கலந்துரையாடுக.

  மாலை மங்கும்பொழுது …

  கூடு திரும்பும் புள்ளினங்கள்

  இவ்வாறான வசனங்கள் படைப்பாக்க ரீதியான வசனங்கள் என இனங்காட்டுக.
- படைப்பாக்கங்கள் பற்றிய விளக்கத்தினை மேலும் பெறச் சந்தர்ப்பத்தை வழங்குதல். (இதன்போது கீழ்காணும் விடயங்களினை கருத்திற் கொள்க.)
- படைப்பாக்கம் என்பது ஓர் அபூர்வமான சொத்து (புதிய . வெளியீடு - இதற்கு முன்பு வெளிவந்திராத ஒன்று)
- ஆக்கக்கருத்தா ஒருவர் பொதுவாக ஒரு விடயத்தை வேறொரு கண்ணோட்டத்தில் பங்கிடும் மற்றும் வெளியிடும் பண்புகளைக் கொண்டவர்.
- படைப்பாக்கம் கவர்ச்சியானது, வாழ்க்கையின் யதார்த்தங்களை வெளிப்படுத்தல் முதலான கருத்துக்களை விளக்குக.

**வரைவிலக்கணம்**

ஏதேனும் புதியதொன்றை உருவாக்கி, அதன் இருப்பை உறுதி செய்யும் செயற்பாடு படைப்பாக்கம் ஆகும். இதற்காகப் பெரும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அவசியமாகும். படைப்பாக்கம் ஆனது ஏற்கனவே மறைந்திருந்த ஒரு விடயத்தைப் பற்றி விளக்கம் அளிக்கப்படுவதுடன், புதிய விடயங்கள் பற்றியும் தெளிவினை வழங்குவதாகும். அது உணர்ச்சிபூர்வமான ஒன்றாக அமையும். இது ஒருவரது இரசனையுணர்வைத் தூண்டி மகிழ்வை ஏற்படுத்தும்.

- Rollo May -

- படைப்பாக்கத்தை ஊடகத்துடன் தொடர்புபடுத்தும்போது படைப்பாக்கரீதியான தொடர்பாடல் தோற்றம் பெறுகின்றது.
- அனைத்து நபர்கட்கும் உரித்தான பலம், பலவீனம், வரையறைகள் காணப்படும்.
- ஊடகத்தினால் வழங்கப்படும் தகவல்களைப் படைப்பாக்க ரீதியான தகவல்களாக மாற்றலாம்.
  - தகவல் வழங்குதல்
  - தூண்டல் ஏற்படுத்தல்
  - கல்வி வழங்குதல்
  - மகிழ்வூட்டுதல்

  முதலானவற்றைப் படைப்பாக்க ரீதியாகச் செய்ய முடியும்.

- வெவ்வேறு ஊடகங்கள் மேற்குறிப்பிட்ட ஆக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக படைப்பாக்க ரீதியான தொடர்பாடலை பயன்படுத்தும் முறையை மாணவருடன் கலந்துரையாடுக.
- படைப்பாற்றல் ரீதியான தொடர்பாடலின், பயன்பாட்டின் முக்கியத்துவத்தை மாணவருடன் கலந்துரையாடுக.
- இங்கு கீழ்காணும் விடயங்கள் பற்றிக் கருத்திற் கொள்க.
    - ஒவ்வொருவருக்குள்ளும் வெவ்வேறு விதமான பார்வைகள் காணப்படும்
    - உலகம் அழகானது
    - எமது பார்வை விசாலமானது
    - மனிதர்களுக்கிடையே தொடர்புகள் உருவாகும்
    - தனியாள் விருத்தி ஏற்படும்
- பல்வேறு படைப்பாக்கங்களை அணுகுவதற்குரிய வாய்ப்பை வழங்கி, படைப்பாக்கப் பண்புகளை விளக்குக.
- உயர் தரம் வாய்ந்த ஆக்கமொன்றை மதிப்பிடும் முறை பற்றி விளக்குக.

  உ-ம்: நாட்டாரியல் மூலாதாரங்கள்
  சமகாலத்தைய சமூக மூலாதாரங்கள்
  வேறு மூலாதாரங்கள்
- பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி உயர் தரம் வாய்ந்த படைப்பாற்றல் பண்புகளை மதிப்பிட மாணவரை வழிப்படுத்துக.
- படைப்பாக்கத்தின் பண்பு வெவ்வேறு காரணங்களுக்காக மாற்றமடையக் கூடும் என்பதை விளக்குக.

  உ-ம் :
  1. தாஜ்மஹால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக தோற்றமளித்தல்
  2. ஜாதகம்
  3. சிறுவர் எண்ணங்கள்
- வெகுசன ஊடகமொன்றின் படைப்பாக்கத் தரத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக. இங்கு கீழ்க்காணும் விடயங்களை விளக்குக.
    - அரசியல்
    - தரமான வெளியீடுகள்
    - சமூகக் காரணிகள்
    - கல்வி மட்டம்

## முக்கியமான பதங்கள் (Key words) :

- ஆக்கபூர்வமான தொடர்பாடல் - Creative Communication
- படைப்பாற்றல் - Creativity

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- விவரணப்பாணியில் எழுதப்பட்ட வாக்கியங்கள்
- படைப்பாக்க பூர்வமாக எழுதப்பட்ட வாக்கியங்கள் அடங்கிய ஆவணங்கள்
- கற்றலுக்கான மாதிரிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- படைப்பாக்கம் என்பது யாது என வரையறுப்பார்.
- படைப்பாக்க பூர்வமான தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- படைப்பாக்கத்தின் ஊடாக ஆக்கியல் தரத்தை வரையறுப்பார்.
- அழியாப் பொறுமானமுள்ள உயரிய படைப்பாக்கங்களின் பெறுமதியை மதிப்பார்.
- வெகுசன ஊடகத்தின் ஆக்கியல் பண்பு பேணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை வரையறுப்பார்.

**தேர்ச்சி 11.0** :- பல்வேறு படைப்பாற்றல் நுட்பங்களை இனங்காண்பதன் மூலம் படைப்பாற்றலுக்காகப் பிரயோகிக்கக் கூடிய நுட்பங்கள், மூலாதாரங்கள் போன்ற விளக்கத்துடன் படைப்பாக்கங்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 11.2 ஆக்கங்களின்போது பிரயோகிக்கப்படக் கூடிய படைப்பாற்றல் விதிகளை இனங்காண்பார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. படைப்பாக்கங்களின் படைப்பாற்றல் பண்புகளை மேம்படுத்தப் பிரயோகிக்கக்கூடிய பல்வேறு முறையியல்களை இனங் காண்பார்.
2. படைப்பாளி என்ற வகையில் தமது ஊடக மொழி தொடர்பான நல்ல விளக்கத்தைப் பெறத்தக்க விதத்தை விவரிப்பார்.
3. படைப்பாளி என்ற வகையில் மொழி ரீதியான விதிமுறைகளின் பாவனை முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுவார்.
4. ஆக்கச் செயற்பாடுகளின்போது பிரயோகிக்கக்கூடிய மொழி ரீதியான வெளிப்படுத்தல் முறையியல்களை படைப்புக்களின் ஊடாக வெளிக்காட்டுவார்.
5. படைப்பாற்றலுக்காக பிரயோகித்துள்ள வெளியீட்டு விதிமுறைகளை இனங்காட்டுவார்.
6. பல்வேறு கட்புல ஊடக வெளியீட்டு விதிகளை ஆக்குவதற்காகப் பிரயோகிக்கக் கூடிய முறைகளை இனங்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- பல்வேறு படைப்பாக்க வெளிப்பாட்டு முறைகள் உள்ளன என்பதை விளங்கிக் கொள்ள பொருத்தமான ஓர் அணுகுமுறையைக் கையாள்க.

  உதாரணம்:
  - கடல் பற்றிய ஓர் சித்திரத்தைக் காட்சிப்படுத்தல்
  - கடல் பற்றிய ஒரு கவிதையைப் பாடுதல்
  - கடல் பற்றிய அழகியல் சார்ந்த வீடியோ காட்சியொன்றினைக் காட்டுதல்
  - கடல் பற்றிக் கூறும் ஒரு பந்தியை முன்வைத்தல்
- மேற்படி அணுகுமுறையைத் தழுவி ஆக்கியல் பூர்வமான வெளிப்பாடுகளுக்காகப் பயன்படும் பின்வரும் வெளிப்பாட்டு முறைகள் தொடர்பாக அடிப்படையான விடயங்களை அறிமுகஞ் செய்து அவற்றை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.
  1. மொழி சார்ந்த வெளிப்பாடு
  2. செவிப்புல வெளிப்பாடு
  3. கட்புல வெளிப்பாடு
  4. கட்புல செவிப்புல வெளிப்பாடு

- மொழியின் தொழில்களாகப் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுக.
    - தகவல்களைத் தருதல்
    - உணர்வுகளைக் கூறுதல்
    - அறிவைத் தருதல்
    - களிப்பூட்டல்
- மேற்படி ஒவ்வொரு தொழில் தொடர்பாகவும் படைப்பாக்கங்களிலிருந்து உதாரணங்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செவிப்புல வெளிப்பாட்டு முறைகள்**

- வெவ்வேறு செவிப்புல வெளிப்பாட்டு முறைகளை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.

  அதற்காக,
    - மனிதன் ஒலியைப் பயன்படுத்தும்போது செய்யும் பல்வேறு ஆக்கியல்பூர்வமான தொடர்பாடல் சந்தர்ப்பங்களுக்காக உதாரணங்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. ஒலியைப் பயன்படுத்திச் செய்யும் படைப்பாக்கத்தின்போது இடம், பிரதேசம், சந்தர்ப்பம் ஆகியவற்றுக்கு அமைய ஒலியின் பாவனை வேறுபடும் என்பதை உதாரணங் காட்டிக் கலந்தரையாடுக.

      உதாரணம்: மேளம் கொட்டுதல் - வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கேற்ப வேறுபடுகின்றன.

**கட்புல வெளிப்பாட்டு முறைகள்**

- கட்புல வெளிப்பாடுகள் என்பதனை இனங்காண வழிப்படுத்துக.

  அதன்கீழ்
    - ஒளிப்படங்கள் (Photograph) - சித்திரங்கள் - சிற்பங்களின் குறியீடுகள்
    - பாரம்பரிய அலங்கரிப்புக்கள் - அங்க அசைவுகள் - அலங்கரிப்புக்கள் போன்ற கட்புல வெளிப்பாடுகளை அறிமுகஞ் செய்க.
- பின்வரும் கட்புலப் படைப்பாக்கங்கள் தொடர்பாக மேலும் கற்பதற்காக மாணவரை வழிப்படுத்துக.
- பிரதேசத்துக்கேயுரிய படைப்பாக்கங்களைக் கற்றாய்தல்

  உதாரணம்:

  - குருத்தோலை அலங்கரிப்புக்கள்
  - கோலங்கள்
  - கட்புலக் குறியீடுகள்
  - கைப்பணிகள்
  - மரக் கலைப்படைப்புக்கள்
  - விகாரைச் சித்திரங்கள்/ கோவில் சித்திரங்கள்/ தேவாலயச்சித்திரங்கள்

**கட்புல - செவிப்புல வெளிப்பாடுகள்**

- கட்புல - செவிப்புல ஆக்கியல் நிகழ்ச்சிகளில் பின்வருவனவற்றை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம்:

  - நாட்டார் நாடகங்கள் (சொக்கரி, கோலம், வசந்தன் கூத்து, காத்தவராயன் நாடகம்)
  - மேடை நாடகப் படைப்புக்கள்
  - திரைப்படங்கள்
  - தொலைக்காட்சி படைப்பாக்க நிகழ்ச்சிகள்
  - கணினி சார்ந்த படைப்பாக்கங்கள்

- இப்படைப்பாக்கங்களின் வெற்றிக்காக எந்த அளவுக்கு, கட்புல - செவிப்புல பண்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன? ஒலிகள் மற்றும் உருவங்கள் அல்லது காட்சிகளின் கலப்பு எந்த அளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது? என்பன பற்றிக் கலந்துரையாடுக.

  ஒலிகள், உருவங்கள் அல்லது படங்கள் கலப்பு ஆக்கத்தின் வெற்றிமீது பங்களிப்புச் செய்யும் விதத்தை எடுத்துக்காட்டுக.

  உதாரணம்: நம்பகத்தன்மை அதிகரித்தல்

- பின்வரும் விடயங்களின்கீழ் சுய கற்கையின்பால் மாணவரை வழிப்படுத்துக.
  - அந்தந்தக் காலத்துக்கமைய சித்திரங்கள் வேறுபடல்
  - பல்வேறு கட்புலக் குறியீடுகள்
  - பிரதேசத்துக்கேயுரிய தனித்துவமான சித்திரங்கள்
  - பிரதேச கட்புலப்படைப்புக்கள்
- கட்புல - செவிப்புல படைப்பாக்கங்களின் ஆக்கியல் இயல்பைக் கலந்துரையாடுக. தெரிவு செய்த படைப்பாக்கங்களைக் கொண்டு ஆக்கியல் இயல்புகளை கற்றாயச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம்: படச்சட்டகங்கள், ஆடையணிகள், பின்னணி, உரையாடல், இசை, ஒலிக்கட்டுப்பாடு, ஒளியூட்டம்

**மேலும் கற்றாய்வதற்காக (Further Study) :**

- கட்புலக்காட்சிகளைக் கொண்ட பாடலொன்றினைத் தெரிவு செய்து கொள்க.
- முதலில் அப்பாடலை மாத்திரம் செவிமடுக்கச் சந்தர்ப்பமளிக்குக. (ஒலி மாத்திரம்)
- அப்பாடலைக் கேட்கும் போது மனதில் தோன்றும் காட்சியைக் குறித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துக.
- எழுமாறாகத் தெரிவு செய்த சில மாணவர்களது படைப்பாக்கக் குறிப்பை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் காட்சியுடன் கூடவே பாடலைக் கேட்கச் சந்தர்ப்பமளிக்குக.
- காட்சியுடன் கூடிய பாடலைக் கற்றாயச் சந்தர்ப்பமளிக்குக.
- படைப்பாக்கங்களின் ஆக்கியல் தன்மை குறித்து மதிப்பீடு செய்க.
  - விளம்பரங்கள்
  - விவரணங்கள்
  - மேடைநாடகம்
  - குரல் சேர்ந்த (Dubbed) நிகழ்ச்சிகள்
  - சமயஞ் சார்ந்த தொலைக்காட்சி நாடகங்கள்

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- கட்புல மாயை - (Visual Illusion)
- கட்புல வெளிப்பாடு - (Visual Expression)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பல்வேறு ஆக்கியல் வெளிப்பாட்டு முறைகளைத் தழுவிச் செல்ல வெற்றிகரமான படைப்பாக்கங்கள், அப்படைப்பாக்கங்களைக் காட்டும் படங்கள், வீடியோக் காட்சிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்தும் பல்வேறு வெளிப்பாட்டு முறைகளை விளக்குவார்.
- படைப்பாக்கத்துக்காக அந்தந்த வெளிப்பாட்டு முறையைப் பயன்படுத்துவதற்கான வலிமையை விவரிப்பார்.
- படைப்பாக்கத்துக்காப் பல்வேறு வெளிப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தும் விதத்தைக் விளக்குவார்.
- பல்வேறு படைப்பாக்க வெளிப்பாட்டு முறைகளைத் தழுவிச் செய்த படைப்பாக்கங்களின் படைப்பாக்கப் பண்புகள் தொடர்பாகப் பகுத்தறிந்து கருத்துத் தெரிவிப்பார்.
- பல்வேறு படைப்பாக்க வெளிப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தி படைப்பாக்கத்தின் படைப்பாக்கப் பண்பை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தத்தக்க அல்லது கையாளத்தக்க உத்திகளை விபரிப்பார்.

**தேர்ச்சி 11.0** :- பல்வேறு படைப்பாற்றல் நுட்பங்களை இனங்காண்பதன் மூலம் படைப்பாற்றலுக்காகப் பிரயோகிக்கக் கூடிய நுட்பங்கள், மூலாதாரங்கள் போன்ற விளக்கத்துடன் படைப்பாக்கங்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 11.3 அழகியல் சூழலை உள்வாங்கல் மற்றும் இரசித்தலுக்காகத் தேசிய படைப்பாக்கல் மூலாதாரங்களின் பிரயோகங்களுடன் கூடிய படைப்பாக்கல் வெளியீடுகளை முன்வைப்பதற்கான முனைப்பை வெளிப்படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 04

**கற்றற்பேறுகள்** :-

1. படைப்பாக்கலின் போது தேசிய படைப்பாக்கல் மூலாதாரங் களின் பெறுமதியை மதிப்பார்.
2. தேசிய படைப்பாற்றல் மூலாதாரங்களுடன் தொடர்புடைய அழகுணர்வுகளுடன் கூடிய ஆக்கங்களை இரசிப்பார்.
3. படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்தக் கூடிய மக்கள் இலக்கிய வளங்கள் தொடர்பான விபரங்களை ஆய்வு செய்வார்.
4. படைப்பாக்கத்திற்காகப் பிரயோகிக்கக் கூடிய பல்வேறு தேசிய வளங்களை அல்லது மூலாதாரங்களை இனங்காண்பார்.
5. பல்வேறுபட்ட தேசிய வளங்கள் அல்லது மூலாதாரங்களைப் பயன்படுத்துவதன் ஊடாக பயனுறுதியுள்ள வெளிப்பாடுகளை முன்வைப்பார்.

## கற்றல் கற்பித்தல் முறையியல் :-

- அழகியற் சூழலை அனுபவித்தல் தொடர்பான ஆக்கியல் பூர்வமான வெளிப்பாடுகள் சுதேச படைப்பாக்க மூலாதாரங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட ஓர் ஆக்கத்தை அல்லது சில ஆக்கங்களை மாணவர்கள் காட்சிப்படுத்தி ஆக்கியல் வெளிப்பாடு தொடர்பாக நட்புடன் கருத்துப்பரிமாறிக் கொள்ளச் சந்தர்ப்பமளித்துப் பாடத்தை அணுகுக.
- படைப்பாளிக்கு தமது சிறப்பான தேர்ச்சிக்கு அமைய படைப்பாக்க வெளிப்பாட்டுக்காக பல்வேறு வெளிப்பாட்டு முறைகளைப் பயன்படுத்தலாம்.

  உதாரணம்:
  - சித்திரம்
  - நாடகம்
  - கவிதை
  - நாவல்
  - பாடல்

- படைப்பாக்கத்துக்காக பல்வேறு மூலாதாரங்கள் பயன்படுத்த முடியும் என்பதைக் கலந்துரையாடுக.

| | |
|---|---|
| 1. இயற்கைச் சூழல் | சூழலின் தன்மை, அழகான காட்சிகள், சமூகத்தில் இடம் பெறும் உண்மையான நிகழ்வுகள் |
| 2. சுதேச மூலாதாரங்கள் | நாட்டார் பாடல்கள், நாட்டார் கதைகள், நாட்டார் சடங்குகள் செதுக்கு வேலைப்பாடுகள், கோலம், நடனம், யாகங்கள் |
| 3. தொழினுட்பம் மூலாதாரங்கள் | கருத்துப்படங்கள் , முப்பரிமாண உருவங்கள், நகரும் வரையுருக்கள் (Graphics) கணினி இசை. |

- படைப்பாக்கத்துக்காக அழகியல் சூழல் சார்ந்த மூலாதாரங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிக் கற்றாயச் சந்தர்ப்பமளிக்குக.

  இதற்காக,

  - அழகியற் சூழல் சார்பாகச் செய்யப்பட்ட படைப்பாக்கங்களை கிரகிப்பதற்கு/ நயப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது
  - அழகியல் சூழல் தொடர்பான சித்திரங்கள்/ பாடல்கள்/ கதைகள்/ வீடியோ காட்சிகள்/ ஒளிப்படங்கள்/ இரசிக்க, நயக்கச் சந்தர்ப்பமளிக்கலாம்
  - அழகியல் சூழலை அனுபவிப்பதன் பெறுமானத்தைக் கலந்துரையாடுக.
  - உண்மையிலேயே சூழலின் அழகை அனுபவிக்கச் சந்தரப்பமளித்து அது சார்ந்த பல்வேறு ஆக்கங்களைப் படைத்தலின்பால் மாணவரை வழிப்படுத்துக.

- படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்தத்தக்க நாட்டார் இலக்கிய மூலாதாரங்கள் தொடர்பான தகவல்களைத் தேடியாயுமாறு மாணவரை வழிப்படுத்துக.
  - நாட்டார் பாடல்கள்/ கவிதைகள் - நாட்டார் கதைகள் - விளையாட்டுப்பாடல்கள்
- படைப்பாக்கத்துக்காகத் பயன்படுத்தத்தக்க வேறு சுதேச மூலாதாரங்களை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக. (நாட்டார் கூத்துக்கள், நாட்டார் நாடகங்கள்)
- பல்வேறு சுதேச மூலாதாரங்களைப் பயன்படுத்தி, படைப்பாக்க வெளிப்பாடுகளைச் செய்வதற்கு மாணவர்களுக்குச் சந்ர்ப்பமளிக்குக.

  இதற்காக,

  - சுற்றாடல் சார்ந்த அழகியல் அனுபவிப்புக்களில் ஈடுபடச் சந்தர்ப்பமளித்து, பல்வேறு படைப்பாக்கக் கருமங்களில் மாணவரை வழிப்படுத்தலாம்.

    உதாரணம்:

    - பாடல்/ கவிதை எழுதுதல்
    - சித்திரம் வரைதல், சிற்பம் வடித்தல், மரத்தில் கலை வேலைப்பாடுகள் செய்தல், ஒளிப்படக் கண்காட்சி
    - குறு வீடியோ நிகழ்ச்சிகளைப் படைத்தல், செவிப்புல ஊடக நிகழ்ச்சிகள் தயாரித்தல்

    (இப்படைப்பாக்கச் செயற்பாடுகளுக்காக விசேட செயலமர்வுகள், ஊடகத்தின் நிகழ்ச்சிகள், பாட இணைச் செயற்பாடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- அழகியல் சூழல் சார்ந்ததாக படைப்பாக்க மாதிரிகள்
- பல்வேறு சுதேச மூலாதாரங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட படைப்பாக்க வெளிப்பாடுகள் - மாதிரிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்தும் பல்வேறு மூலாதாரங்களை அறிமுகஞ் செய்வார்.
- படைப்பாக்கத்துக்காக பயன்படுத்தக்கூடிய கிராமிய/ நாட்டார் இலக்கிய மூலாதாரங் களைப் பகுத்தாய்வார்.
- படைப்பாக்கத்துக்காப் பயன்படுத்தத்தக்க சுதேச கட்புல மூலாதாரங்களின் பெறுமானத்தை மதிப்பார்.
- வெவ்வேறு மூலாதாரங்களைப் பயன்படுத்தி, படைப்பாக்க வெளிப்பாடுகளை முன்வைக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி 11.0** :- பல்வேறு படைப்பாற்றல் நுட்பங்களை இனங்காண்பதன் மூலம் படைப்பாற்றலுக்காகப் பிரயோகிக்கக் கூடிய நுட்பங்கள், மூலாதாரங்கள் போன்ற விளக்கத்துடன் படைப்பாக்கங்களை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 11.4 பல்வேறு படைப்பாற்றல் நுட்பங்களை இனங் காண்பதன் மூலம் படைப்பாற்றலுக்காகப் பிரயோகிக்கக்கூடிய முறைகளை அடிப்படை எண்ணக்கரு விளக்கத்துடன் வெளிப் படுத்தக் கூடிய முனைப்புகையைப் பெறுவார்.

**பாடவேளைகள்** :- 05

**கற்றற்பேறுகள்** :-

1. ஊடக வெளியீடுகளின் தயாரிப்பிற்கான ஒழுக்கவிதிகளை இனங்காண்பார்.
2. ஊடக வெளியீடுகளின் தயாரிப்பிற்கான சட்டதிட்டங்களை உணர்ந்து கொள்வார்.
3. ஊடக வெளியீடுகளைத் தயாரிப்பதுடன் தொடர்புடைய ஒழுக்கவிதிகளினதும், சட்டதிட்டங்களினதும் அமுலாக்கத்தின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவார்.
4. ஊடக வெளியீடுகளைத் தயாரிப்பதுடன் தொடர்பான ஒழுக்கவிதிகளையும், சட்டதிட்டங்களையும் பின்பற்றுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்** :-

- ஊடகப் படைப்பாக்க ஒழுக்கங்கள் சட்டங்கள் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்காட்டும் நடித்தற் செயற்பாடொன்றைச் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.

  இன்றேல் கட்புல சந்தர்ப்பமொன்றினை முன்வைக்குக.

  உதாரணம்: படைப்பாளி ஒருவர், தமது படைப்பாக்கத்தின் உரிமை தவறாகப் பயன்படுத்தப்படுகின்றமை பற்றிக் காட்டும் துலங்கல்/ எதிர்வினை

- மேற்படி அணுகுமுறையைத் துணையாகக் கொண்டு படைப்பாக்கம் தெடர்பான ஒழுக்கங்கள், சட்டங்கள் பற்றிய அடிப்படையான விளக்கத்தைப் பெற மாணவரை வழிப்படுத்துக. அதற்காக,
  - ஒழுக்கங்கள், சட்டங்கள் ஆகிய எண்ணக்கருக்களை இனங்காண வழிப்படுத்துக.
  - தடை வரையறைகள் (வழக்காறு) ஒழுக்கம், சட்டம்
  - சிறு குழுக்களில் தடைகள் தோன்றின
  - வழக்காறுகள் - சமயப் படிப்பினைகள் மூலம் தோன்றியவை
  - வரையறைகள் - வாய்வழியாகக் கூறிய எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளல் (சமய சடங்குகள், விவாக திருமண மட்டுப்பாடுகள், அரசியல் மட்டுப்பாடுகள்)
  - ஒழுக்கங்கள் : சமூகத்தின் இருப்பைக் காக்கும் வகையில், சமூகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தொகுதி நல்லவைகள் (யாதேனும் தத்துவத்தின் மீதமைந்து சிந்தனை வழிப்பட்ட நிலை)

- படைப்பாக்கத்துடன் தொடர்புடைய ஒழுக்கங்கள் சட்டங்கள் இருப்பதன் அவசியத்தைக் கலந்துரையாடுக.

  உதாரணம்:
  - படைப்பாளிகளுக்கு வெளியீட்டுச் சுதந்திரம் கிடைத்தல்
  - சமூகத்தின்பால் முன்வைக்கப்படும் படைப்பாக்கங்களைப் பொறுப்புடனும் கட்டுப்பாட்டுடனும் முன்வைத்தல்
  - படைப்பாளிகளின் புலமைச் சொத்து உரிமைகளைப் பாதுகாத்தல்
- இலங்கையில் ஊடகப் படைப்பாக்கம் தொடர்பான பல்வேறு ஒழுக்கக் கோவைகள் பற்றிய தகவல்களைத் தேடியாயுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- ஊடகப் படைப்பாக்கங்களுடன் தொடர்புடைய சட்டத்தை இனங்காண மாணவரை வழிப்படுத்துக. குறிப்பாக பின்வரும் உரிமைகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களைக் கற்றாயுமாறு வழிப்படுத்துக.
  1. புலமைச் சொத்து உரித்து/ வெளியீட்டு உரித்து
  2. வெளியீட்டுச் சுதந்திரம்
- ஊடக படைப்பாக்கம் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள், சட்டங்கள் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.

| | தொடர்பியலாளன் | பெறுநர் |
|---|---|---|
| ஒழுக்கங்கள் | | |
| சட்டங்கள் | | |

## முக்கியமான பதங்கள் (Key words) :
- ஊடக ஒழுக்கங்கள் - (Ethics of Media)
- ஊடகச் சட்டம் - (Media law)
- வெளியீட்டு உரித்து - (Copyright)
- புலமைச் சொத்து உரித்து - (Inlellectual Property Right)

## தரவிருத்தி உள்ளீடுகள் :
- அரசியலமைப்பு
- தொலைக்காட்சிச் சட்டம்
- கல்விச்சட்டம்
- பத்திரிகைச் சபைச் சட்டம்
- அரங்கக் கட்டுப்பாட்டுச் சபை

## கணிப்பீடும் மதிப்பீடும்
- ஊடக ஒழுக்கத்துக்கும் ஊடக சட்டத்துக்கும் இடையிலான வேறுபாட்டை ஒப்பிடுவார்.
- படைப்பாக்கம் தொடர்பான ஊடக ஒழுக்கங்களை எடுத்துக்காட்டுவார்.
- படைப்பாக்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஊடக சட்டங்களை வரையறுப்பார்.
- ஊடக ஒழுக்கங்கள், சட்டங்கள் நடைமுறையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை உறுதிப்படுத்துவார்.
- ஊடகங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் சட்டங்கள் அடங்கிய ஆவணங்களைப் பெயரிடுவார்.

**தேர்ச்சி 12.0** :- மாணவன் / மாணவி உடனடியாகத் துலங்கலை வெளிக்காட்டும் விமர்சனரீதியான பெறுநரது தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 12.1 விமர்சனரீதியான பெறுநர்கள் பற்றிய பின்புல அறிவுடன் விமர்சன ரீதியில் ஊடகத் தகவல்களை நுகரும் தேர்ச்சியை மாணவன்/ மாணவி வெளிக்காட்டுவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. தொடர்பாடல் செயற்பாடானது இருவழிச் செயற்பாடு என்பதை விளக்குவார்.
2. தொடர்பாடல் செயற்பாட்டில் தொடர்புறும் பெறுநர்களது வகைகளை விபரிப்பார்.
3. தொடர்பாடல் செயற்பாட்டில் ஊடகங்களது நோக்கங்களை ஒப்பிடுவார்.
4. பெறுநர்களது வகைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடுபவர் தம் வெளியீடுகளை அல்லது அளிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தை ஊடக வெளியீடுகள் மூலம் இனங்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- தொடர்பாடல் செயற்பாட்டின் போது தொடர்பாடுபவர் மற்றும் பெறுநருக்கிடையில் இருவழித்தொடர்பு நிலவுவதை மாணவருடன் கலந்துரையாடுதல்.
- தொடர்பாடல் செயற்பாட்டின் போது தொடர்பாடுபவர் மற்றும் பெறுநர் ஆகிய இருபிரிவினரிடத்தேயும் பல்வேறு வித்தியாசங்கள் காணப்படும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்.
- கீழ்க்காணும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு இவ்வேறுபாடுகளை மேலும் இனங்காண மாணவரை ஊக்குவித்தல்.

| தொடர்பாடுபவர் வேறுபடும் இயல்புகள் | பெறுநர் வேறுபடும் இயல்புகள். |
|---|---|
| 1. கவர்ச்சியான பேச்சு | 1. நீண்ட நேரம் செவிமடுப்பதற்கான விருப்பம் |
| 2. தொடர்ச்சியாகப் பேசுதல் | 2. கவர்ச்சியான முறையில் பேச்சு/ வெளியீடுகள் அல்லது முன்வைத் தல்கள் இருக்க வேண்டுமென எண்ணுபவர்கள் |
| 3. மற்றைவர்களது இயல்பைக் கிரகித்துக் கொள்ளல் அல்லது மற்றையவரை அறிந்து கொள்ளல். | 3. தொடர்பாடுபவரால் வெளிப்படுத்தப் படும் தகவல்களை மதிப்பிட விரும்புவோர் |

- இவ்வேறுபாடுகளில் தொடர்பாடல் நிகழும் சந்தர்ப்பம் மற்றும் தொடர்பாடுபவர் மற்றும் பெறுநர்களுக்கிடையிலான தொடர்பு அல்லது உறவு என்பன தாக்கம் செலுத்தும் என்பதையும் மாணவருடன் கலந்துரையாடுதல்.
- பெறுநர்கள் மத்தியில் காணப்படும் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடுபவர் தம் பிரசுரங்களை அல்லது வெளியீடுகளை மற்றும் முன்வைப்புக்களை மாற்றிக் கொள்வர் என்பதை இனங்காட்டுதல். இதன்போது கட்புல, செவிப்புல மற்றும் அச்சு ஊடக வெளியீடுகளைப் பயன்படுத்தல், நடித்தற் செயற்பாடு (Role play) முதலான உத்திகளைக் கையாண்டு மாணவருக்குப் போதிய விளக்கத்தை வழங்குதல்.

  உதாரணம்:-

  - பெறுநரது வயதை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடல் நிகழும் சந்தர்ப்பம்.
  - ஆரம்பப்பள்ளி ஆசிரியர் ஒருவர் மாணவருடன் மிகவும் அன்பான முறையில் அவர்களைக் கவரும் சொற்கள், படங்கள் முதலானவற்றைப் பயன்படுத்தி கற்பித்தலில் ஈடுபடும் சந்தர்ப்பம்
- பெறுநரது சமூக பின்புலத்தை அடிப்படையாகக்கொண்டு தொடர்பாடல் நிகழும் சந்தர்ப்பம். உதாரணமாக, விவசாய உபகரணங்களை விளம்பரப்படுத்துவதற்கு விவசாயக் கிராமமொன்றைத் தெரிவுசெய்தல்.
- பெறுநரது பண்பாட்டை அடிப்படையாகக்கொண்டு தொடர்பாடல் நிகழும் சந்தர்ப்பம். உதாரணமாக, விளம்பரங்களில் சுதேசிய பண்பாட்டைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் தகவல்களை மக்களுக்கு வழங்குதல்.
- தொடர்பாடுபவர் தன் நோக்கத்தினடிப்படையில் தன் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதோடு, பெறுநரையும் தொடர்பாடல் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்காக வெவ்வேறு தந்திரோபாயங்களையும் பயன்படுத்துவார் என்பதை மாணவருக்கு விளக்குதல்.
  - வர்ணப்பயன்பாடு/ ஆடை அணிகலன்/ பின்புலத்தயாரிப்பு
  - பரிசில்கள் வழங்குதல்
  - பல்வேறு ஊடகப்பயன்பாடுகள்/ வாய்மொழி, வாய்மொழியற்ற தொடர்பாடல் முறைமைகள்.
  - பெறுநர்களின் வேறுபாட்டின் அடிப்படையில் பொருத்தமான ஊடகத்தைத் தெரிவு செய்தல் அல்லது பயன்படுத்துதல்.
  - பெறுநர்கள் மத்தியில் காணப்படும் வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு தொடர்பாடலில் ஈடுபடுதல்.
- எல்லாத் தொடர்பாடல் சந்தர்ப்பங்களிலும் தொடர்பாடுபவரின் இலக்கு அவர் எண்ணியவாறே நிறைவேற்றப்படுவதில்லை என்பதை மாணவர்கள் கற்றுக்கொள்ளும்படி வழிப்படுத்துதல். இலக்கு நிறைவேறாமைக்குரிய காரணிகளை மாணவர்கள் தேடியறியும்படி நெறிப்படுத்துதல்.
- வெகுசன ஊடகங்கள் பெறுநரின் நோக்கை நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் முனைப்புக் காட்டுகின்றன என்பதை வெகுசன ஊடக வெளியீடுகளின் ஊடாக மாணவர்களுடன் கலந்துரையாடுதல். இதன்போது முதலில் பெறுநரின் நோக்கங்கள், ஊடகத்தின் நோக்கங்கள் என்பவற்றை இனங்காண வழிவகுப்பதோடு, அவற்றிற்கிடையே பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதையும் இனங்காண வழிவகுத்தல்.

  உதாரணம்:- ஊடக நோக்கங்களில் வணிக நோக்கே முதன்மை இடத்தில் காணப்படுவதால் பெறுநர்களது நோக்கை நிறைவேற்றுதல் தடைப்படுகிறது.

### முக்கியமான பதங்கள் (Key words) :

- ஊடக விமர்சனம் - Media Criticism

### தரவிருத்தி உள்ளீடுகள் :

- தொடர்பாடுபவர், பெறுநர் ஆகியோரின் வேறுபாடுகளின்படி தொடர்பாடல் நிகழும் விதத்தை அறிமுகஞ் செய்வதற்குப் பொருத்தமான செவிப்புல, கட்புல - செவிப்புல, அச்சு ஊடகக் கற்கை மாதிரிகள்

### கணிப்பீடும் மதிப்பீடும்

- தொடர்பாடல் இருவழிச் செயற்பாடு என்பதை விபரிப்பார்.
- தொடர்பாடல் செயற்பாட்டில் பெறுநர்களுக்கிடையே காணப்படும் வேறுபாட்டை விளக்குவார்.
- பெறுநர்களின் வேறுபாட்டின் அடிப்படையில் தொடர்பாடுபவர் தொடர்பாடல் செயற்பாட்டில் ஈடுப்படுவதற்காக உபயோகிக்கும் நுட்பமுறைகளை விளக்குவார்.
- ஊடகங்களின் நோக்கங்களுக்கும், பெறுநர்களின் நோக்கங்களுக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை ஊடக வெளியீடுகள் ஊடாக விபரிப்பார்.

**தேர்ச்சி 12.0** :- மாணவன்/ மாணவி உடனடியாகத் துலங்கலை வெளிக்காட்டும் விமர்சனரீதியான பெறுநரது தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 12.2 தொடர்பாடல் மற்றும் பெறுநருகிடையே நிலவும் இடைத்தொடர்பை மாணவன்/ மாணவி பரிசீலிப்பார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களின் பணியை விளக்குவார்.
2. வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களின் இயல்புகளை ஒப்பீட்டடிப்படையில் விபரிப்பார்.
3. வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் தாக்கங்களை ஆய்வுசெய்வார்.
4. பெறுநர்கள் ஊடகங்களுக்கு பின்னூட்டலை வழங்கும் பல்வேறு வடிவங்களை மதிப்பீடு செய்வார்.
5. வெகுசன ஊடக நோக்கங்கள் மற்றும் பெறுநர்களின் நோக்கங்களுக்கிடையேயான வேறுபாட்டைக் கற்பார்.
6. ஊடகங்கள் பெறுநர் மீதும் பெறுநர் ஊடகங்கள் மீதும் தாக்கம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை உறுதி செய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- தற்காலச் சமூகம் பயன்படுத்தும் வெவ்வேறான வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களை இனங்கண்டு கொள்ள மாணவர்களை நெறிப்படுத்துதல்.
- இவ்வாறாக பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை, தீமைகளை ஒப்பீட்டடிப்படையில் கலந்துரையாடுவதற்குரிய சந்தர்ப்பத்தை மாணவர்களுக்கு வழங்குதல்.
- வெகுசன ஊடகங்கள் மற்றும் புதிய ஊடகங்களின் பண்புகளை ஒப்பீட்டு அடிப்படையில் கலந்துரையாடுதல்.
- வெகுசன மற்றும் புதிய ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தாக்கங்கள் பற்றிய தகவல்களை மாணவர்கள் கற்க வழிப்படுத்துதல்.
    - கலந்துரையாடல்கள், விவாதங்கள் முதலான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல்.
    - செயற்படாத பெறுநர் (Inactive Recipient), மந்தப் பெறுநர் (Passive Recipient), செயற்படு பெறுநர் (Active Recipient) ஆகியோர் செயற்படும் விதத்தை மாணவர் இனங்காணும்படி நெறிப்படுத்துதல்.
        - வெவ்வேறு தகவல்களுக்கு மேற்குறிப்பிட்ட பெறுநர்கள் செயற்படும் விதங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுக.
        - வினைத்திறன்மிக்க ஒரு தொடர்பாடல் செயற்பாட்டிற்கு செயற்படு பெறுநரின் அவசியம் பற்றி மாணவர் கவனத்திற்கு கொண்டு வருக.
        - வெவ்வேறு ஊடக வெளியீடுகள் தொடர்பாகச் செயற்படு பெறுநர் செயற்படும் விதத்தை ஊடக வெளியீடுகள் தொடர்பாகப் பெறுநர்கள் வெளிப்படுத்தும் பின்னூட்டலை அடிப்படையாகக் கொண்டு மாணவருடன் கலந்துரையாடுக.

- மாணவர்கள் வெகுசன மற்றும் புதிய ஊடகங்களுக்கிடையிலான தொடர்பைக் கற்றறியும்படி வழிப்படுத்துதல். இதற்காக வெகுசன ஊடகத்தால் வெளியிடப்பட்ட ஓர் செய்தியை புதிய ஊடகங்கள் எவ்வாறு முன்வைக்கின்றன, விமர்சிக்கின்றன, விபரிக்கின்றன என்பவற்றை எடுத்துக்காட்டுதல்.

## முக்கியமான பதங்கள் (Key words) :

- புதிய ஊடகம் - (New media)
- சமூக தாக்கம் - (Social impact)
- விமர்சன ரீதியான பெறுநர் - (Critical recipient)
- செயற்படு பெறுநர் - (Active Recipient)
- மந்த பெறுநர் - (Passive Recipient)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- தலைப்பிற்குப் பொருத்தமான அறிக்கைகள், ஆவணங்கள், ஆய்வுகள்.
  உதாரணம்:- புதிய ஊடகப்பாவனையால் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தாக்கம் தொடர்பான ஆய்வு.
- எண்ணக்கருக்களை விளக்குவதற்குப் பொருத்தமான படங்கள்/வீடியோ காட்சிகள்/ஒலி நாடாக்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- வெகுசன ஊடகம், புதிய ஊடகம் என்பவற்றை இனங்காணும் ஆற்றலைப் பெறுவார்.
- வெகுசன ஊடகப் பாவனையால் ஏற்படும் சமூகத் தாக்கத்தை மதிப்பிடுவார்.
- வெகுசன ஊடகங்களுக்கு பின்னூட்டத்தை வழங்குகின்ற அடிப்படையில் பெறுநர்களை வகைப்படுத்திக் காட்டுவார்.
- விமர்சன ரீதியாக பெறுநரது நிலையையும் பெறுமதியையும் இனங்காட்டுவார்.
- வெவ்வேறு ஊடகங்களையும் ஆய்வு செய்யும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி 12.0** :- மாணவன்/ மாணவி உடனடியாகத் துலங்கலை வெளிக்காட்டும் விமர்சனரீதியான பெறுநரது தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 12.3 சிறுவர்களுக்கும் ஊடகங்களிற்கும் இடையிலான தொடர்பு மற்றும் அந்நியோன்ய தாக்கம் என்பவற்றை விமர்சன ரீதியாக இனங்காண்பார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. சிறுவர்கள் ஊடகத்தைப் பயன்படுத்தும் விதத்தினை விபரிப்பார்.
2. வெவ்வேறு ஊடகங்கள் ஓர் நுகர்வோன் என்ற அடிப்படையில் சிறுவர்களுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைப் பரீட்சிப்பார்.
3. ஊடகங்கள் சிறுவர் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை விமர்சன ரீதியாகப் பகுத்தாய்வார்.
4. ஊடகங்கள் சிறுவர்களுக்கான சேவைகளை வழங்க வேண்டிய விதத்தை விளக்குவார்.
5. சிறுவர் தம் கற்றல் நடவடிக்கைகளுக்காக ஊடகங்களை வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்தக்கூடிய முறைகளை விளக்குவார்.
6. சிறுவர் பொழுதுபோக்கிற்காகவும் இரசிப்பதற்காகவும் ஊடகங்களை வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்தகூடிய முறைகளை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல்** :-

- சில தொலைக்காட்சிச் சேவைகளின் (Channels) நிகழ்ச்சி நிரல் விவரங்களை வகுப்பில் முன்வைக்குக. அவற்றுள் மாணவர்கள் பார்க்கும்/ கேட்கும் நிகழ்ச்சிகளை வினவிக் குறிப்பிடுக.
- வெவ்வேறு பத்திரிகைகளின் பெயர்களைக் காட்சிப்படுத்துக. அவற்றுள் மாணவர் பயன்படுத்தும் செய்தித்தாள்களை வினவி செய்தித்தாள் கட்டுரைகள் தொடர்பாக அறிமுகஞ் செய்க.
- மாணவரது ஊடகப் பயன்பாடு தொடர்பாகத் தேடியறிவதற்குப் பொருத்தமான ஓர் ஆய்வு நடத்துமாறு மாணவரை வழிப்படுதுக.
- சமகால நிகழ்வுகள், திடீர் நிகழ்வுகள் போன்றவை பற்றிய செய்திகள் பற்றி பிள்ளைகளின் அறிவூட்டம் பற்றியும், அவர்கள் பயன்படுத்தும் ஊடகங்கள் பற்றியும் விசாரித்தறிக.
- மாணவர்கள் பார்க்கும் ஏனைய சிந்தை கவர் நிகழ்ச்சிகள் பற்றி உரையாடுக.
- வெவ்வேறு ஊடகங்கள் பிள்ளைகளுக்காக சேவைகள் வழங்கும் விதத்தைக் கலந்துரையாடுக.
- அவ்வூடக வெளிப்பாடுகளின் பொருத்தப்பாடு பொருத்தமின்மை மற்றும் வலிவு நலிவுகளைக் கலந்துரையாடுக.

  உதாரணம்: கல்வி நிகழ்ச்சிகள்     சிறுவர் நாடகங்கள்

  போட்டி நிகழ்ச்சிகள்     களிப்பூட்டும் நிகழ்ச்சிகள்

- பிள்ளைகளுக்காக ஊடகங்கள் சேவை வழங்க வேண்டிய விதத்தைக் கலந்துரையாடுக.

  உதாரணம்:
  - மொழிப்பயன்பாடு பொருத்தமானதாக இருத்தல்
  - பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாத்தல்
  - பிள்ளைகளது உள்ளத்துக்குப் பொருத்தமானவற்றை முன்வைத்தல்
  - பிள்ளைகளது பல்வேறு திறன்களை மதித்தல்
  - பிள்ளைகளது ஆர்வங்கள்/ விருப்புக்களுக்குச் சந்தர்ப்பமளித்தல்
  - பிள்ளைகளின் விருத்திக்கு பங்களித்தல்
- ஊடகமாக பிள்ளைக்கு ஒரு நுகர்வோன் என்ற வகையில் வழங்கும் பெறுமானம் பற்றிப் பகுத்தாய்ந்து கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம்: பிள்ளையை விளம்பரங்களுக்காகப் பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு/ பொருத்தமின்மை
- விளம்பரங்கள் மூலம் பிள்ளைகள் மீது ஏற்படுத்தப்படும் செல்வாக்குகளைக் கற்றாய வழிப்படுத்துக.

  உதாரணம்:
  - பண்டங்களை வாங்கத் தூண்டுதல்
  - பணிகள், பெறுமானங்கள், பாங்குகளை வலுக்கட்டாயமாகப் பழக்குதல்/ பரிச்சயப் படுத்தல்
  - மொழிப்பயன்பாடு மீது ஏற்படுத்தப்படும் செல்வாக்கு
  - பழக்க வழக்கங்கள் மீது ஏற்படுத்தப்படும் செல்வாக்கு
  - பிள்ளைகளை மதித்தல்
  - பிள்ளைகள் அனைவரையும் சமமானவர்களாகக் கருதுதல்
  - பிள்ளையைப் பொறுப்புடன் செயற்படப் பழக்குதல்
- பிள்ளை, களிப்புறுவதற்கும் கற்பதற்கும் ஊடகத்தைப் பயனுள்ளவாறு பயன்படுத்த வேண்டிய விதத்தைக் கலந்துரையாடுக.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- வெவ்வேறு ஊடகங்கள் பிள்ளைகளுக்காக வெளியிடும் ஊடக வெளியீடுகள் - மாதிரிகளைப் பெறுதல்
- பிள்ளைகளுக்கென வெளியாகும் பல்வேறு ஊடக வெளியீடுகளை வகைப்படுத்தல்
- பிள்ளை, ஊடகத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பது தொடர்பான மாணவர் ஆய்வுத்திறன்களைக் கணிப்பிடுதல்
- பிள்ளையை நோக்காகக் கொண்ட பல்வேறு ஊடக வெளியீடுகள் தொடர்பாக பகுத்தறிந்து கருத்துத் தெரிவித்தல்
- ஊடகங்கள், பிள்ளைகளுக்காக சேவைகள் வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய நியமங்களை முன்வைத்தல்
- வெவ்வேறு ஊடக வெளியீடுகள், ஒரு நுகர்வோர் என்ற வகையில் பிள்ளைக்கு வழங்கும் பெறுமானம் தொடர்பாகப் பகுத்தாய்ந்து கருத்து வெளியிடல்
- பிள்ளை கற்பதற்கும் களிப்புறுவதற்கும் ஊடகத்தைப் பயனுள்ளவாறு பயன்படுத்த வேண்டிய விதத்தை விவரித்தல்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பிள்ளைகளுக்கான நிகழ்ச்சிகளை வழங்கும் வெவ்வேறு ஊடக வெளியீடுகளைப் பெயரிடுவார்.
- பிள்ளைகளுக்காக வெளியிடப்படும் நிகழ்ச்சிகளை வகைப்படுத்துவார்.
- பிள்ளை ஊடகத்தைப் பயன்படுத்தும் விதம் தொடர்பான மாணவர் கலந்துரையாடலை மதிப்பிடுவார்.
- பிள்ளை வெவ்வேறு ஊடக வெளியீடுகள் தொடர்பில் விமர்சன ரீதியான கருத்துக்களை வெளியிடுவார்.
- ஊடகங்கள் தாம் பிள்ளைகளுக்காக ஓர் ஆக்கத்தை வெளியிடும்போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களை முன்வைப்பார்.
- ஊடக வெளியீடுகள் பிள்ளையை ஒரு நுகர்வோனாகக் கருதிப் பிள்ளைக்கு அளிக்கும் மதிப்பினை விமர்சிப்பார்.
- பிள்ளை கற்றலுக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் ஊடகத்தை வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்தக் கூடிய விதத்தை விபரிப்பார்.

**தேர்ச்சி 12.0** :- மாணவன் / மாணவி உடனடியாகத் துலங்கலை வெளிக்காட்டும் விமர்சனரீதியான பெறுநரது தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- 12.4 வெவ்வேறு ஊடக உபகரணங்களைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகளை, அற நெறிகளைப் பிரயோகிக்கும் ஆற்றலை மாணவன்/ மாணவி வெளிப் படுத்துவார்.

**பாடவேளைகள்** :- 03

**கற்றற்பேறுகள்** :-

1. ஊடகப் பயன்பாட்டில் ஒழுக்க விதிகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை விளக்குவார்.
2. கணிணிப் பயன்பாட்டின்போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க விதிகளை இனங்காட்டுவார்.
3. கையடக்கத்தொலைபேசி பாவனையின்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகள் தொடர்பாகச் சமூகத்தினருக்கு விழிப்புணர்வூட்டுவார்.
4. சமூக ஊடகப் (Social media) பாவனையின்போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க விதிகளை இனங்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் முறையியல் :-**

- விமர்சன ரீதியான பெறுநர் பற்றிய அறிமுகத்தினை மாணவர்கள் பெற்றுக்கொள்ள வழிப்படுத்துதல்.
- விமர்சன ரீதியான பெறுநர் ஒருவர் செயற்படும் விதம் பற்றி மாணவர்கள் கற்றறிவதற்கு வாய்ப்பு வழங்குதல்.

  இங்கு விமர்சன ரீதியான பெறுநருக்குப் பொருத்தமான ஊடக வெளியீடுகள், வீடியோ காட்சிகள், ஆவணங்கள் முதலான கற்பித்தல் வளங்களைப் பயன்படுத்துதல்.
- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஊடக வெளியீட்டை விமர்சன ரீதியாகக் கற்பதற்கு மாணவரை வழிப்படுத்துதல்.
- ஊடக வெளியீடுகள் தொடர்பாகத் துலங்கல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவரை ஈடுபடுத்துதல். இங்கு, மாணவர்களது விமர்சன ரீதியான கருத்துக்களுக்காகச் சுவரொட்டியை அல்லது சுவர்ப் பத்திரிகையை பயன்படுத்துவது தொடர்பில் மாணவர்களை ஈடுபடுத்துதல் போதுமானதாகும். இதனைவிட மிகப்பொருத்தமான விமர்சன ரீதியான கருத்துக்களை ஊடகங்களுக்கு மாணவர்கள் அனுப்பிவைக்க அனுசரணை வழங்கவும் முடியும்.

**முக்கியமான பதங்கள் (Key words) :**

- விமர்சன ரீதியான பெறுநர் (Critical Reciever)
- பெறுநரது துலங்கல்கள் (Reciever's Responses)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- தலைப்புக்கு பொருத்தமான ஊடக வெளியீட்டு மாதிரிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- விமர்சன ரீதியான பெறுநர் பற்றிய அறிமுகஞ் செய்வார்.
- விமர்சன ரீதியான பெறுநரின் பண்புகளை அறிமுகப்படுத்துவார்.
- விமர்சன ரீதியான பெறுநர் என்ற அடிப்படையில் ஊடக வெளியீடுகளை விமர்சிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- விமர்சன ரீதியான துலங்கல்களை முன்வைக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.